REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2022 மே 31 செவ்வாய்க்கிழமை

தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 90 இல. 126 | Tuesday 31, May, 2022 | 36பக்கங்கள் | 40/-

மக்கள் நலனுக்காகவே 21 ஆவது திருத்தம்

மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பது மக்களுக்கு செய்யும் துரோகம்

அரசியலமைப்பு திருத்தத்துக்கு விரைவில் குழு

ஷம்ஸ் பாஹிம்

மக்கள் நலனுக்காக கொண்டுவரப்படும் 21 ஆவது திருத்தத்தை மக்கள் பிரதிநிதிகள் எதிர்க்கக் கூடாது எனவும் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாத வகையில் உத்தேச அரசியலமைப்பு 21வது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் நீதி அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார். அதனை எதிர்ப்பது மக்களுக்கு செய்யும் துரோகம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்க எதிர்காலத்தில் பாராளுமன்ற குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனவும் எதிர்வரும்

06

நந்தலால், சிறிவர்த்தன, ஷர்மினி, இந்திரஜித் அடங்கலாக

பொருளாதார ஸ்திரத்தன்மையை கொண்டு வர ஆலோசனை சபை

Dr. சமரசிங்க தலைமையில் பிரதமரினால் நியமிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டுவருவது தொடர்பில் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர். சமரசிங்கவின் தலைமையில் போதிய அதிகாரங்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம், மற்றும் முக்கிய கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் வகையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் மேற்படி

06

வங்கியில் கடன்பெற்று திரும்ப செலுத்தவில்லையா?

சாணக்கியனின் குற்றச்சாட்டு தயா கமகே முழுமையாக மறுப்பு

சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசனை

மக்கள் வங்கியில் இருந்து கடன் பெற்றுக்கொண்டு மூன்று வருடமாக ஒரு சதமேனும் திருப்பி செலுத்தவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை நிராகரிப்பதாக ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தயா கமகே தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்திருக்கும் அவரது காரியாலயத்தில் நேற்று முன்தினம் (29) மாலை நடைபெற்ற

06

பருவப்பயிற் செய்கை பாதிக்கப்படாதிருக்க ஏற்பாடு;

உணவு பாதுகாப்பிற்கு விரிவான வேலைத்திட்டம்

அரசாங்க – தனியார் கூட்டு திட்டத்தை ஆரம்பிக்க ஜனாதிபதி பணிப்பு

- தேசிய உரக்கொள்கை ஒன்றை துரிதமாக உருவாக்கவும் ஆலோசனை
- உரத்தேவையை நிவர்த்திக்க வெளிநாடுகளுடன் நடத்திய பேச்சு வெற்றி

உணவு பாதுகாப்பு தொடர்பான விரிவான அரச, தனியார் கூட்டு வேலைத்திட்டமொன்றை துரிதமாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

உரத் தேவையை நிவர்த்தி செய்து கொள்வதற்காக பல நாடுகளுடன் முன்னெடுக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. எனவே உரத்தட்டுப்பாடு அல்லது வேறு

06

சிறுமி ஆயிஷா கொலை;

குற்றத்தை ஒப்புக் கொண்டு அயலவர் வாக்குமூலம்

பிரேத பரிசோதனையின் பின் நேற்று சடலம் நல்லடக்கம்

பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என உறுதிப்படுத்தல்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம், மொரட்டுவை மத்திய விசேட நிருபர்

பண்டாரகம, அட்டுலுகம பகுதியில் கொலை செய்யப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷா கொலை தொடர்பான மர்மம் நேற்று அம்பலமாகியுள்ளதுடன் அதற்கிணங்க சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ள நபர் ஒருவர் நேற்று குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ள நிலையில் தாமே குறித்த சிறுமியை படுகொலை செய்ததாக அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். 29 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை படுகொலை செய்யப்

பட்டுள்ள சிறுமி பாத்திமா ஆயிஷா மீதான பிரேத பரிசோதனை அறிக்கைக் கிணங்க சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு

06

தோட்டங்களில் பட்டினி சாவை தடுக்க ஒரே வழி இதுதான்;

தரிசு காணிகளை உடனே பிரித்து தொழிலாளர்களிடம் வழங்கவும்

பிரதமர் ரணிலுக்கு மனோ MP அவசர கடிதம்

உரம் இல்லாததால், நெல் விளைச்சல் இல்லை. உள்நாட்டு நெல் விளைச்சல் இல்லாததால் அரிசி இல்லை. அதேபோல், உரப் பிரச்சினை தேயிலை உற்பத்தியையும் பாதித்துள்ளது. தோட்டங்களில் வேலை இல்லை. ஆகவே வருமானம் இல்லை. உணவுக்காக, அரிசி, கோதுமை வாங்க பணமுமில்லை. கடைகளில் பொருளுமில்லை. இதனால்

06

நாளை ஜூன் 01 முதலே சமையல் Gas விநியோகம்

வரிசைகளில் நிற்பதை தவிர்க்க கோரிக்கை

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நாளை புதன் கிழமை (01) முதல் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆகவே, எரிவாயு சிலிண்டருக்காக வரிசையில் காத்திருப்பதை பொது மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

3,500 மெற்றிக்தொன் எரிவாயு அடங்கிய கப்பல் இன்று நாட்டை வந்தடைந்ததும், தரையிறக்கல்

06

2021இல் சதொசவில் 8.4 பில். ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தினார்;

ஜோன்ஸ்டனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீண்டும் வழங்கியது

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட்ட மூவருக்கு எதிராக, முன்னர் திரும்பப் பெறப்பட்ட குற்றப்பத்திரிகைக்கு பதிலாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புதிய குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக குற்றப்பத்திரிகைகளை திரும்பப் பெறுவதற்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தீர்மானித்ததை அடுத்து,

06

ஜூன் மாத எரிபொருளை கொள்வனவு செய்ய 554 மில்லியன் டொலர் தேவை

ம.வ. ஆளுநருடன் அமைச்சர் கஞ்சன பேச்சு

லோரன்ஸ் செல்வநாயகம்

எரிபொருள் கொள்வனவிற்காக டொலர்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் நேற்றைய தினம் எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுக்கும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி

06

GCE A/L பரீட்சை முடிவுகள் ஜூலையில் வெளியிட ஏற்பாடு

பரீட்சை ஆணையாளர் நேற்று தெரிவிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் எப்பொழுது வெளியிடப்படும் என்பது குறித்த தகவல்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன வெளியிட்டுள்ளார்.

அதன்படி பெறுபேறுகள் எதிர்வரும் ஜூலை மாதம் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பிரயோக பரீட்சைகள் நடத்தப்பட்டு

06

"21" இல் மேலும் திருத்தங்கள் அவசியமென SJB வலியுறுத்து

வாக்கெடுப்பு நடத்தவும் கோரிக்கை விடுப்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கூடுதல் அதிகாரங்களைக் குறைக்க முன்மொழியப்பட்ட 21வது திருத்தச் சட்டத்தில் மேலும் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

ஜனாதிபதி எந்த அமைச்சுப் பதவியையும் வகிப்பதைத் தடுப்பதற்கும் ஜனாதிபதியை

06

விமலுக்கு எதிரான தும்முல்லை வழக்கு

ஆகஸ்ட் வரை ஒத்தி வைக்கப்பட்டது

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த தினம், வீதியை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதன் ஊடாக பொது மக்களுக்கு இடையூறு விளைவித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச உள்ளிட்ட 6 சந்தேக நபர்களுக்கு எதிரான

06

சஷியின் மேன்முறையீட்டு மனு இன்று வரை ஒத்திவைப்பு

கொழும்பு பிரதான நீதவான் உத்தரவு

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து ராஜதந்திர கடவுச்சீட்டை பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக விமல் வீரவங்சவின் மனைவி சஷி வீரவங்சவுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள சிறைத் தண்டனையை எதிர்த்து தாக்கல்

06

ரயில் முன்பதிவு ஆசன கட்டணங்கள் அதிகரிப்பு

நாளை ஜூன் 01 முதல் 30%த்தால் அதிகரிப்பு

ரயில்வே திணைக்களம் ஜூன் 1ஆம் திகதி முதல் முன்பதிவு இருக்கைகளுக்கான கட்டணத்தை அதிகரிக்கவுள்ளது.

அதன்படி, 1ஆம் திகதி முதல் முன்பதிவு இருக்கைகளுக்கான கட்டணம் 30% உயர்த்தப்பட்டுள்ளது.

புகையிரத சேவைகளில் ஏற்படும்

06

காணாமல் போன மகனைத்தேடி

நீதி கேட்டு போராடிய தாயார் திடீர் மரணம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத்தேடி தொடர்ந்து போராடிக்கொண்டிருந்த ஈழத்தமிழர் உறவினர் அமைப்பின் வடமராட்சி கிழக்கு ஒருங்கிணைப்பாளரான அருளானந்தம் மேரி பற்றிமா (புஷ்பராணி) வயது 68 என் பவர் திடீர் சுகயீனம் காரணமாக

06

கோழி இறைச்சியின் விலை ரூ.1,200ஆகலாம்

முட்டை ரூ. 50ஆக அதிகரிப்பு

எதிர்வரும் நாட்களில் கோழி முட்டை மற்றும் கோழி இறைச்சி விலைகள் அதிகரிக்கலாம் என கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனடிப்படையில் ஒரு முட்டையின் விலை 50 ரூபா வரையும் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை ஆயிரத்து 200 ரூபா வரையும் அதிகரிக்கலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

06

புறக்கோட்டை பஸ் நிலையத்தில் துவக்குச் சூடு

ஒருவர் பலி; இன்னொருவர் காயம்

புறக்கோட்டை, பெஸ்டியன் மாவத்தையிலுள்ள பஸ் நிலையத்தில் நேற்று இடம் பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்

06

நிந்தவூரில் கடலரிப்பு; மீனவர் கட்டடம் சேதம்

நிந்தவூர் குறூப் நிருபர்

நிந்த வூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தொடர் கடலரிப்பின் காரணமாக, கடலோரத்தை அண்டிய கரையோரங்கள் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் வாடிகள், தென்னை மரங்கள் மற்றும் பல்தேவைக் கட்டடங்களும் பாதிக்கப்பட்டு, நாளுக்கு நாள் கடலினால் அள்ளுண்டு போவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், தங்களின் மீன்பிடி சம்பந்தமான விடயங்களை கலந்தாலோசித்துக் கொள்வதற்கும், அவைகளை சிறந்த முறையில் நிர்வகித்துக் கொள்வதற்கும் பல தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டு தற்பொழுது அவர்கள் நடு வீதிக்கு வரும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் தொடர் கடலரிப்பின் மூலமாக பல பாதிப்புக்கள் ஏற்

பட்டிருந்த போதும், அது அரசியல்வாதிகள் மற்றும் அரச அலுவலகங்கள் மூலமாக சிறிது சிறிதாகவே நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருந்தது.

இவ்வாறு இருக்கும் நிலையில், நிந்தவூர் 9ம் பிரிவு பிர்தௌஸ் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு முன்பாக வுள்ள மீனவர்களுக்குச் சொந்தமான மீனவர் சங்கக் கட்டடம் தொடர் கடலரிப்புக் காரணமாக கடலால் காவு கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடமானது கடந்த சுனாமியின் பின்னர் வெளிநாட்டு தொண்டு நிறுவனம் ஒன்றினால் இலவசமாக வழங்கப்பட்டது. இங்கு மீனவர்கள் தங்களது மீனவர் சங்க செயற்பாடுகளை முன்னெடுத்து வந்ததுடன், அதன் பிறகு நிந்தவூர் ஒன்பதாம் பிரிவு சனசமூக நிலைய கட்டடமாகவும் இயங்கி வந்தது. இதில் மீனவர்களின் கூட்டங்கள், வேறு சங்கங்களின் கூட்டங்கள் மற்றும் இதர நிகழ்வுகள் என்பன நாள்தோறும் நடைபெற்று வந்ததுடன், இந்த கட்டிடத்தின் மேல் மாடியில் இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் என்பன பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தற்காலிகமாக பொலிஸ் நிலையம் இயங்கி வந்ததுடன், தற்போது மீனவர் தேவையுடன் கூடிய இப்பிரதேச சனசமூக நிலையமாகவும் இயங்கி வருகின்றது.

தேசிய சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலக மட்டத்தில் கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக பொது இடங்களில் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் சிரமதானப் பணிகள் திங்கட்கிழமை (30) முன்னெடுக்கப்பட்ட போது.

படம்: தோப்பூர் தினகரன் நிருபர்

இளைஞர் கழகத்தின் நிருவாக தெரிவும் பொதுக் கூட்டமும்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிருவாக தெரிவும் பொதுக் கூட்டமும் ஞாயிற்றுக்கிழமை (29) காத்தான்குடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் காத்தான்குடி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான நிருவாக புதிய நிருவாக தெரிவும் பொதுக் கூட்டமும் இளைஞர் சேவைகள் மன்ற காத்தான்குடி உத்தியோகத்தர் முகம்மட் றம்சி தலைமையில் நடைபெற்றது.

இதில் காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா, பிஸ்மி கல்வி நிறுவனத்தின் தவிசாளர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.பிர்தௌஸ் நழீமி, சமூக மேம்பாட்டுக்கான மக்கள் ஒன்றியத்தின் தலைவர் எம்.ஹாரிஸ் உட்பட இளைஞர் கழகங்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது காத்தான்குடி இளைஞர் கழக சம்மேளனத்தின் 2022ஆம் ஆண்டுக்கான நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஐ.எல்.எம்.சாபிர், பொருளாளராக அப்றாஸ், உப செயலாளராக அப்துர் ரஹ்மான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இங்கு சிறப்புரையினை பிஸ்மி கல்வி நிறுவனத்தின் தவிசாளர் அஷ்ஷெய்க் எம்.பி.எம்.பிர்தௌஸ் நழீமி நிகழ்த்தினார்.

டெங்கு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த ஐவருக்கு வழக்குத் தாக்கல்

ஒலுவில் விசேட நிருபர்

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த 05 நபர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும், 20 நபர்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.இஸ்மாயில் தெரிவித்தார்.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தினையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை மற்றும் திராய்க்கேணி ஆகிய பிரதேசங்களில் பொதுச்

சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட டெங்கொழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட 32 கிராம சேவகர் பிரிவுகளில் 900 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட டெங்கொழிப்பு பரிசோதனையின் போதே டெங்கு நுளம்பு பரவக் கூடிய 100 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு குறித்த நபர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச, தனியார் நிறுவனங்கள், தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம், பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பவற்றிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்தார். சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்கள் ஒரு வார காலத்திற்குள் குறித்த இடங்களை துப்புரவு செய்ய வேண்டுமெனவும், மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக்காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

அமெரிக்க DFC யிடமிருந்து 15 மில். டொலர்களை நீண்டகால நிதியமாக பெறுகிறது BPPL

BPPL அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத் தாபனத்திடமிருந்து (DFC) 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை நீண்டகால நிதியுதவியாக பெற்றுக் கொண்டு இலங்கையின் பிளாஸ்டிக் மீள்சுழற்சி திறன்கள் மற்றும் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவதற்காக துறையின் முன்னோடிகளான BPPL Holdings PLC தயாராகிவருகிறது.

BPPLஆனது பிளாஸ்டிக் கழிவுகளை அதன் முதன்மை மூலப் பொருளாகப் பயன்படுத்தி மோனோஃபிலமென்ட்கள் மற்றும் பொலியஸ்டர் நூல்களின் உற்பத்தியை விரிவுபடுத்த அமெரிக்க அரசாங்க மேம்பாட்டு நிதி நிறுவனத்தில் (DFC) திரட்டப்பட்ட நிதியைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

இது இலங்கைக்கு அதிக ஏற்றுமதி வருவாயை உருவாக்கும் மற்றும் நாட்டின் முக்கியமான சுற்றுச்சூழல் பிரச்சினையான பிளாஸ்டிக் அகற்றல் பிரச்சினையையும் தீர்க்கும்.

BPPL தென்கிழக்கு ஆசியாவில் உள்ள மிகப் பெரிய தூரிகை உற்பத்தியாளர்களில் ஒன்றாகும் மற்றும் இலங்கையின் ஒரேயொரு பொலியஸ்டர் நூல் உற்பத்தியாளர் ஆகும்.

இது அதிநவீன உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் நிலைத்தன்மைக்கான அசைக்கமுடியாத அர்ப்பணிப்பால் இயக்கப்படுகிறது.

அவை கழிவு பிளாஸ்டிக்குகளை தூரிகைகள், மோனோஃபிலமென்ட்கள் மற்றும் மீள்சுழற்சி செய்யப்பட்ட பொலியஸ்டர் நூல்களாக மாற்றுகின்றன, இவை அனைத்தும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

நிறுவனத்தின் சமீபத்திய முயற்சிகள் ஃபோர்ப்ஸ் ஏசியாவின் பலவிருதுகளை வென்றுள்ளன, 2021ஆம் ஆண்டில் ஆசியாவின் 1 பில்லியன் டொலருக்கும் குறைவான வருவாயை பெறும்முதல் 200 நிறுவனங்களின் தரவரிசைப்படுத்தப்பட்டிருந்தமையும் இதில்குறிப்பிடத்தக்கது.

SLT-MOBITEL கேரகல படைவீரர் கிராமத்துக்கு அதிவேக புரோட்பான்ட் இணைப்பு வசதி

இலங்கைக்கு 100% 4G LTE இணைப்புத் தீர்வுகளை வழங்கி வலுவூட்டும் தனது அர்ப்பணிப்பை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில், கம்பஹா, கேரகல படைவீரர் கிராமத்தில் மற்றுமொரு வலைக்கோபுரத்தை SLTMOBITEL அண்மையில் நிறுவியிருந்தது. அதனூடாக இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிவேக இணைய இணைப்புத் தீர்வுகளை வழங்கியிருந்தது. போர் வீரர்கள் அடங்கலாக, கிராமத்தைச் சேர்ந்த ஏனைய குடும்பங்களுக்கு உயர் தரமான அதிவேக 4G LTE இணைப்பை இந்தத் திட்டம் வழங்கும். நகர அபிவிருத்தி, கழிவகற்றல் மற்றும் சமூக தாய்மை தொடர்பான நாலக கொடஹேவா எம்.பி மற்றும் SLTMOBITEL இன் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தேசத்தை பாதுகாக்கும் வகையில் அளப்பரிய அர்ப்பணிப்பை மேற்கொண்ட இராணுவ வீரர்களுக்காக, இலங்கை இராணுவத்தினால் நாடு முழுவதிலும் இராணுவ வீரர் கிராமிய வீடமைப்புத் திட்டங்கள் நிர் மாணிக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் வாடிக்கையாளர்களுக்கான CBC டிஜிட்டல் செயற்பாட்டை அறிமுகம் செய்துள்ள கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கியின் மிகப்பெரிய கடல்கடந்த செயற்பாடான பங்களாதேஷ் கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்களுக்கான CBC டிஜிட்டல் செயற்பாட்டை அறிமுகம் செய்துள்ளதன் மூலம் இணையவழி வங்கி அனுபவத்துக்கு புது மெருகூட்டியுள்ளது. வங்கியின் ஒற்றை இணையவழி அலைவரிசையான omni சனல் மூலம் இது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

2020ல் இலங்கையின் கொம்பேங்க் டிஜிட்டலுக்கு ஒத்ததான CBC டிஜிட்டல் வங்கியின் இணைய மற்றும் நடமாடும் பிரயோகங்களுக்கு வலுவூட்டும் வகையில் விரிவான இணைய சேவைகளை வழங்குகின்றது. அடிப்படை கணக்கு விசாரணை, கொடுப்பனவுகள் மற்றும் பரிமாற்றங்கள், வர்த்தகப் பாவனையாளர்களுக்கு பட்டியல் கொடுப்பனவுத் தெரிவுகள், கோவைகள் தரவேற்றம் மூலம் கொடுப்பனவு பல்தெரிவுகள், குழு ரீதியான கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய அம்சங்கள் என்பனவும் இதில் அடங்கும்.CBC டிஜிட்டலை ஒரு இணைய செயலியாகப் பயன்படுத்த முடியும். இது முற்றிலும் சர்வதேச தரம் வாய்ந்தது. அதி உச்ச பாவனையாளர் பாதுகாப்பை உறுதி செய்யும் அம்சங்களோடு இந்த செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக வங்கி அறிவித்துள்ளது.

இந்தப் புதிய இணைய மேடையின் அறிமுகம் பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின்; முகாமைத்துவப் பணிப்பாளரும், குழுமத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான எஸ்.ரெங்கநாதன் "கொமர்ஷல் வங்கியின் டிஜிட்டல் பரிமாற்றத்தில் இது மற்றொரு மைல் கல்லாகும். இதன் மூலம் பங்களாதேஷில் உள்ள எமது வாடிக்கையாளர்கள் அளவற்ற எமது உற்பத்திகளையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறினார்.

2022இன் பிராண்ட் பினான்ஸ் தரவரிசையில் பத்து இடங்கள் முன்னேறிய சியெட்

வாயு மூலமான டயர் வகைகளில், அதிகளவை விற்பனை செய்யும் சியெட் நிறுவனம், இலங்கையின் டயர் வகைப்படுத்தலில் மிகவும் பெறுமதி மிக்க வர்த்தக முத்திரையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. உலகின் முன்னணி தர மதிப்பீட்டு சேவையான பிராண்ட் பினான்ஸின் அண்மைய தர வரிசை வெளியீட்டில் பத்து இடங்கள் முன்னேறி இந்த இலக்கை சியெட் எட்டி உள்ளது.

பிராண்ட் பினான்ஸ் தனது 2022 தர வரிசையில் சியெட் வர்த்தக முத்திரையை 2.922 பில்லியன்களாக மதிப்பிட்டுள்ளது.

இது 2021ஐ விட 40 வீதம் அதிகமானதாகும். அத்தோடு நாட்டில் உள்ள மிகப் பெரிய வங்கிகள், தொலைத்தொடர்பு சேவை நிறுவனங்கள், மிகப் பெரிய சில்லறை விற்பனை நிலையங்கள்; உட்பட மிகச் சிறந்த 100

வர்த்தக முத்திரைகளில் 38வது இடத்தையும் சியெட்டுக்கு வழங்கி உள்ளது.

சியெட் வர்த்தக இலச்சினைக்கு AAA வர்த்தக தரமும் பிராண்ட் பினான்ஸின் 2022 தரப்படுத்தலில் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் இவ்வாண்டு நுகர்வோர் வர்த்தக முத்திரைகளில் இரண்டாவது அதி உயர் தரப்படுத்தலாக இது உள்ளது.

சியெட்டுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த தரப்படுத்தல் பற்றி கருத்து வெளியிட்ட சியெட் களனி ஹோல் டிங்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி டட்லானி "துன்பமே திறமைக்கான சிறந்த சோதனைகள். பூகோள ரீதியான நோய்ப்பரவலின் ஆரம்பம் முதல் பிராண்ட் பினான்ஸின் அதி உயர் தர வரிசையில் 15 இடங்கள் சியெட் முன்னேறி உள்ளது. 2020 முதல் வர்த்தக இலச்சினை பெறுமானமும் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. எமது நினைவுகளில் உள்ள மிகவும் சவாலுக்கு உள்ளான ஒரு காலத்தில் இத்தகைய வளர்ச்சியானது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். அத்தோடு இத்தகைய நிச்சயமற்ற சூழலில் நம்பிக்கைக்குரிய ஒரு மூலாதாரமாகவும் அது உள்ளது" என்றார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2022 மே 31 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
29 முதல் 31 வரை
சுபஹ் - 04.32
லுஹர் - 12.09
அஸர் - 03.35
மஃரிப் - 06.23
இஷா - 07.39

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் வைகாசி 17
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: பிரதமை

21 ஆவது திருத்தம் குறித்து அமரபுர மகா நிகாயாவின் பீட தொடம்பஹல சந்தசிறி மகாநாயக்க தேரருக்கு நீதி அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவினால் விளக்கமளிக்கப்பட்டது. அதன் பிரதியை கையளிப்பதை படத்தில் காணலாம்.

21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு

அனைத்துக் கட்சிகளின் ஆதரவு அவசியம்

முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

உத்தேச அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்திற்கு அனைத்துக் கட்சிகளும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்தகால குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் மக்கள் நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதற்கும் அத்துடன் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டும் அதற்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ள அவர், 21 ஆவது அரசியலமைப்பு திருத்தம் அதற்கு சிறந்த ஆரம்பமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவு மூலம் இந்த தகவலை வெளியிட்டுள்ள முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும, தனிநபர் மற்றும் அரசியல் தேவைகளை முன்னிறுத்தி கடந்தகாலங்களில் அரசியலமைப்புகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இது சிறந்த வாய்ப்பாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான

நீண்ட கால விசா திட்டமான 'கோல்டன் பரடைஸ்' விசா திட்டம் அங்குரார்ப்பணம்

ஸாதிக் ஷிஹான்

இலங்கையில் முதலீடு செய்ய, வாழ மற்றும் கல்வி கற்க வசதியாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நீண்ட கால விசா திட்டமான 'கோல்டன் பரடைஸ் விசா திட்டத்தின்' அங்குரார்ப்பண விழா மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோர் தலைமையில் பத்தரமுல்லயிலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் நேற்று (30) இடம்பெற்றது.

இதன்போது கோல்டன் பரடைஸ் வதிவிட விசா திட்டத்திற்கான உத்தியோகபூர்வ

06

அட்டுலுகம சிறுமி உயிரிழப்பு விவகாரம்

இனியும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டும்

உலமா சபை கோரிக்கை

இதற்குப் பின்னர் இந்நாட்டில் இதேபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கோரியுள்ளது. குழந்தைகள் உட்பட இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழும் உரிமை இந்நாட்டில் உத்தரவாதப்படுத்தப்படவேண்டும். கடந்த சில தினங்களுக்கு முன் காணாமல் போன அட்டுலுகமையச் சேர்ந்த சிறுமி பாத்திமா ஆயிஷா நேற்று சடலமாக மீட்கப்பட்ட செய்தி எம்மை பெரும் கவலையிலும் அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளதோடு, சிறுமி பாத்திமா ஆயிஷாவின் குடும்பத்திற்கு ஜம்இய்யா தனது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதாக அதன் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் அவசரமாக சட்டத்திற்கு முன்

06

நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினருக்காக

சமூக பாதுகாப்பு திட்டமொன்றை முன்னெடுக்க ஐ.ம.ச கோரிக்கை

நெருக்கடி நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினரை இலக்கு வைத்து சமூக பாதுகாப்பு திட்டமொன்றை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் அனைத்து அத்தியாவசியமற்ற செயற்திட்டங்களும் நிறுத்தப்பட்டு, அதற்கென செலவிடப்படும் பணத்தை குறுகிய காலத்தில் சமூக பாதுகாப்புக்காக பயன்படுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நீங்கள் எங்கு வேலை செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல. வறுமையில் இருந்து விடுபடாமல் வாழ முடியுமா என்பதுதான் முக்கியம் என அவர் தெரிவித்துள்ளார். மக்கள் வாழ முடியாத நிலையில் உள்ளனர். எரிபொருள் விலையுடன் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மாத சம்பளம் பெறுவோரின் கொடுப்பனவு அதிகரிக்கப்படாத நிலையில் அவர்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.இலக்குசார்ந்த சமூக பாதுகாப்பு திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டும். உதவி வழங்க வேண்டிய குழுக்களை தெரிவு செய்து அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். அரச துறையில் குறைந்த வருமானம் பெறுவோர் உள்ளனர். தனியார் துறையிலும் அத்தகையவர்கள் உள்ளனர்.தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் தான் இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டது என்றும் தெரிவித்தார்.

பணம் அச்சிட்டதால் நெருக்கடி நிலை உயர்ந்தது. ஒன்றரை டிரில்லியனுக்கு மேல் பணம் அச்சிடப்பட்டுள்ளது. சாதாரண மக்கள் மோசமான நிலையில் உள்ளனர். பணம் அச்சிடாது தேவையற்ற செலவுகளை குறைத்து அந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்றார்.

(பா)

மருந்துப் பொருட்களின் விலை வெகுவாக அதிகரிப்பு

கொள்வனவு செய்வதற்கு டொலர் அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் மருந்துப் பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்து வரும் நிலையில் அவசியமான டொலர்களை பெற்றுக்கொள்ள நாணய கடிதங்களை விடுவிக்காமல் மருந்துகளை இறக்குமதி செய்ய முடியாது என அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் அந்த சங்கத்தின் பொருளாளர் மஞ்சுள ஜயவர்தன தெரிவிக்கையில் :

மருந்துகளின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில் அந்த விலைகளை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. எனினும் மக்கள் மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வழமையாக மாதாந்தம் மருந்துகளுக்காக 3000 ரூபாவை செலவிடுபவர்கள் தற்போது சுமார் 9,000 ரூபாவை செலவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகாரசபையின் செயற்பாடுகளும் தற்போது பாதிக்கப்பட்டுள்ளன. தனியார் மருந்தக நிறுவனங்கள் மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு

06

பாரியளவு விலை அதிகரிப்பு

மதுபான விற்பனையில் என்றுமில்லா வீழ்ச்சி

சுமார் 40 சதவீத வருமானம் இழப்பு

பாரியளவில் விலை அதிகரிக்கப்பட்ட காரணத்தினால் மதுபான விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. மதுபான விற்பனை சுமார் 40 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என மதுவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மதுபான விற்பனை வீழ்ச்சி மதுவரி வருமானத்திலும் தாக்கம் செலுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அதிகளவு விற்பனை செய்யப்படும் மதுப் பிரியர்கள் அதிகம் கொள்வனவு செய்யும் மதுபான வகையொன்றின் கால் போத்தல் மதுபானம் 550 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் விற்பனையில் பாரியளவு வீழ்ச்சி பதிவாகியுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சாதாரண தர பரீட்சை எழுதிய முதியவர்

நெலுவ, கஞ்சேபாவிட்டிய னை வசிப்பிடமாகக் கொண்ட 74 வயதான சந்திரதாச கொடகே எனும் முதியவர், நெலுவ தேசிய பாடசாலையில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாட பரீட்சைக்கு தோற்றினார்.

இதன்படி, கடந்த சனிக்கிழமையன்று (28) விஞ்ஞான பாட பரீட்சை தோற்றியிருந்த சந்திரதாச கொடகே, நேற்று (30) கணித பாட பரீட்சைக்கும் தோற்றியிருந்தார்.

கடந்த வருட க.பொ.த சா/த பரீட்சையில் விஞ்ஞான பாடத்திற்கு தோற்றி அந்த பாடத்தில் சாதாரண (S) சித்தி பெற்றிருந்தார்.

இவ்விடயம் குறித்து சந்திர தாச கூறுகையில்,

"எனக்கு இப்போது 74 வயதாகிறது. 1970 ஆம் ஆண்டு தான் நான் முதன் முதலாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றினேன். அலபலதெனிய மகா வித்தியாலயத்தில் படித்தேன். அந்தப் பரீட்சையில் நான்கு திறமை சித்திகள் பெற்றிருந்தேன்.

ஆனால், அப்போதைய அரசியல் அழுத்தத்தால் பரீட்சையில் தேர்ச்சி

06

சௌந்தரி டேவிட்டின் ஏற்பாட்டில் சங்கீதமேகம் இன்னிசை நிகழ்வு

கொழும்பு எல்.ஃபின்ங்ஸ்டன் அரங்கில் ஜூன்மாதம் 05 மாலை 5.30 மணிக்கு

சௌந்தரி டேவிட் ரொட்றிகோவின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த 'சங்கீதமேகம்' இசைநிகழ்வு எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. கடந்த 2022 மேமாதம் 13 ஆம் திகதி திட்டமிடப்பட்டிருந்த இந்த இசைநிகழ்வானது அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மற்றும் ஊரடங்குசட்டம் என்பன காரணமாக பிற்போடப்பட்டது.

இந்நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டது குறித்து கருத்துத் தெரிவித்த சௌந்தரி "சங்கீதமேகமெனும் இத் தனித்துவமான இசைநிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் இசைக்கலைஞர்கள் மற்றும் பாடகர்களுடன் இணைந்து உங்களிடம் இதனை கொண்டு சேர்க்ககடுமையாக பாடுபட்டுவருகின்றனர். அதேவேளை எமது மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும் நாம் நன்கறிவதுடன் இந்த இருள் படிந்தகாலத்தில் இசையால் இருள் போக்கிமக்கள் மனங்களில் சங்கீதத்தால் சற்றுமகிழ்ச்சியை கொண்டு வந்துநம்பிக்கை பாய்ச்சுவதற்கான காலகட்டமாக இது திகழ்கின்றது. இளம் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வது அத்தியாவசியமானதொன்றென கருதுகின்றோம். ஏனெனில் அவர்களின் திறமைகளை அடையாளப்படுத்தும் ஒரே இடம் இந்த மக்கள் மேடையாகும். அசாதாரணமான மற்றும் பதற்றமான சூழலில் ஓர் பெரும் ஆறுதல் அளிக்கும் இசைவிருந்தாகவும் திகழும்" என்றார்.

இந்த இசைநிகழ்வானது

06

பாகிஸ்தான்-இலங்கை நட்புறவு நூலகம் திறப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலய ஏற்பாட்டில் பாகிஸ்தான் இலங்கை நட்புறவு நூலகமொன்று நேற்று (30) கொழும்பு 7 ல் உள்ள குதிரைப் பந்தய மைதானத்தின் வாகன தரிப்பிடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பாருக் புர்க்கி மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) உதய நாணயக்காரவும் இணைந்து திறந்து வைத்தனர்.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் இந்நூலக நிர்மாணப்பணிக்காக 2.3 மில்லியன் ரூபாவை நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் செலுத்தியுள்ளது. பாதையோர நூலகம் எனப் பெயரிடப்பட்டு ரோயல் கல்லூரிக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் பார்வையாளர்கள் இங்குள்ள

06

நாணய மாற்று

	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	238.54	249.41
கனடியன் டொலர்	256.80	267.07
யூரோ	340.83	352.42
ஜப்பான் யென்	2.5659	2.6696
சிங்கப்பூர் டொலர்	239.52	248.06
ஸ்டேலிங் பவுன்ஸ்	423.68	438.67
சுவிஸ் பிராங்க்	344.01	357.45
அமெரிக்க டொலர்	322.72	334.99

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	831.93	கட்டார் ரியால்	85.92
குவைத் டினார்	1,028.76	சவூதி ரியால்	83.64
ஓமான் ரியால்	814.75	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	85.39

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் வைகாசி மாதம் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷவ்வால் பிறை 29

குறள் தரும் சிந்தனை

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்

வெள்ளம் போல் துன்பம் வந்தாலும் அதனை வெல்லும் வழி யாது என்பதை அறிவுடையவர்கள் நினைத்த மாத்திரத்திலேயே அத்துன்பம் விலகிஓடிவிடும்.

நாட்டு நலன்களை முன்னிலைப்படுத்திய அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தம்

தற்போது நாடு முகம் கொடுத்துள்ள பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு அரசியலமைப்புக்கான திருத்தத்தின் ஊடாக தீர்வுகளைத் தேடுவது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு அரசியலமைப்புக்கான 21வது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கின்றன.

அதாவது அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் ஊடாக பாராளுமன்றத்தின் அதிகாரம் பலப்படுத்தப்பட்டு ஜனநாயக விழுமியங்கள் வலுப்படுத்தப்பட்டிருந்தன. ஜனாதிபதியின் அதிகாரங்களும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தின் ஊடாக பாராளுமன்ற அதிகாரங்கள் பலவீனப்படுத்தப்பட்டதால் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளும் முடங்கியுள்ளன. இத்திருத்தத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரத்திடம் மீண்டும் அதிக அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ளன.

இவை இவ்வாறிருக்க, தற்போது நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அதனைத் தவிர்ப்பதற்கு பாராளுமன்றம் செயற்படவில்லை என்பது இன்றைய பிரதான குற்றச்சாட்டாகவும் உள்ளது. அத்தோடு பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இருந்தும், அதன் பாராளுமன்ற பணிகள் புறக்கணிக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான பின்புலத்தில், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தத்தின் ஊடாகவும் தீர்வு தேடும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பான நடவடிக்கைகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் நிமித்தம் கட்சித் தலைவர்களை அழைத்து பிரதமர் கலந்துரையாடியுள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டு நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்த யோசனையை கடந்த 23 ஆம் திகதி அமைச்சரவைக்கும் சமர்ப்பித்துள்ளார்.

அதாவது அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளை சீர்மைத்து 19 ஆவது திருத்தத்துக்கு புத்துயிரூட்டும் வகையில் 21 ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் ஊடாக பாராளுமன்ற அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டு பாரளுமன்ற நிர்வாகமும் வலுப்படுத்தப்படும். அத்தோடு பெரும்பாலான அரச நிறுவனங்கள் சுயாதீனமாக செயற்படக் கூடிய நிலைமையை மீண்டும் பெற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த திட்டத்திற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தமது ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்றது.

பாராளுமன்ற அதிகாரங்களைப் பலப்படுத்துவதன் ஊடாக நாடும் மக்களும் அதிக பிரதிபலன்களை அடைந்து கொள்ளலாம். இதற்கு கடந்த கால அனுபவங்கள் உதாரணமாக அமைந்துள்ளன. பொருளாதார சவாலுக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காணவே தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு விரைவாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. அதனால் மக்களின் எதிர்ப்பார்ப்புக்கு ஏற்ப நடவடிக்கைகளை முன்னெடுப்பதுதான் மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படும் மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகவும் பணியாகவும் இருக்க வேண்டும்.

இருப்பினும் இப்பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு தேடும் நோக்கில் பாராளுமன்ற அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் 21 ஆவது திருத்தத்தின் ஊடாக பலப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்படும் நடவடிக்கையை அற்ப அரசியல் இலாபம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பயன்படுத்திக் கொள்ள சிலர் முயற்சிக்கின்றனர். அந்த வகையில்தான் இத்திருத்தம் தனிநபர் ஒருவரை இலக்கு வைத்தவாறு கொண்டு வருவதற்கு முயற்சிக்கப்படுவதாக அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தம் தனிநபர் எவரையும் இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளதோடு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும் வரை பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்றும் கூறியுள்ளார்.

அதனால் முழு நாட்டினதும் நலன்களை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் இந்த அரசியலமைப்புக்கான 21 ஆவது திருத்தத் திட்டத்தை தனியொருவரை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுவதை எவ்வித்திலும் நியாயப்படுத்த முடியாது என்பதுதான் மக்களின் அபிப்பிராயமாக உள்ளது.

ஆகவே நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே நாட்டின் சுபிட்சத்துக்கும் விமோசனத்திற்கும் பக்கபலமாகவும் பங்களிப்பாகவும் அமையும்.

editor.tkn@lakehouse.lk

மட்டக்களப்புக்கு சீனத் தூதுவரின் நல்லெண்ண நட்புறவு விஜயம்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு சில தினங்களுக்கு முன்னர் விஜய மொன்றினை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்.

இதன் போது இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் மற்றும் அவரது பாரியார் மற்றும் சீன தூதரக அதிகாரிகள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்ததுடன், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

இன்றைய நெருக்கடியான சூழலில் சீன அரசினால் இலங்கை பூராகவும் வறிய மக்களுக்காக வழங்கப்பட்டு வருகின்ற உலர் உணவு நிவாரணப் பொதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கென 2500 பொதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அங்கு நடைபெற்ற நிகழ்வின் போது தேர்ந்தெடுக்கப்பட்ட சில குடும்பங்களுக்கு சீனத் தூதுவரினால் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து இதன் போது விளக்கமளிக்கப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வளங்கள் தொடர்பாகவும் சீனத் தூதுர் அறிந்து கொள்ளும் வண்ணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சனி ஸ்ரீகாந்த் அவர்களினால் விளக்கமளிக்கப்பட்டது. இதன் போது மாவட்டத்தின் முக்கிய உற்பத்தித் துறைகளான மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்து துறைசார் அபிவிருத்தி விடயங்கள் தொடர்பிலான திட்டங்களையும் சீனத் தூதுவரிடம் செயலக அதிகாரிகள் முன்வைத்துள்ளனர்.

சீன தூதுவரை கௌரவிக்கும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபரால் நினைவுச் பரிசில்கள் வழங்கப்பட்டன. மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து, சீன தூதுவர் உள்ளிட்ட சீன தூதரக அதிகாரிகள் மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தை சென்று பார்வையிட்டதுடன், சிறியதொரு அன்பளிப்பினையும் பேராலயத்தின் பங்குத்தந்தை அருட் தந்தை போதுரு ஜீவராஜிடம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வசதி குன்றிய மக்களுக்கு உலர் உணவுப் பொதி விநியோகம்; கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலாசார பாரம்பரியத்துடன் வரவேற்பு

இந்நிகழ்வுகளில் காணிப்பிரிவு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்ஜினி முகுந்தன், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.கே.டபிள்யு. கே.சில்வா, மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்க, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி இந்திராவதி மேகன், மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத், பிரதேச செயலாளர்கள், மாவட்ட பொறியியலாளர் ரீ.சுமன், மாவட்ட சுமூர்த்தி திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.ஜதீஸ்குமார் உள்ளிட்ட மேலும் பல மாவட்ட செயலக உயரதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர். இதே போன்று வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு இலங்கைக்கான சீனத்தூதுவர் உள்ளிட்ட குழுவினர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கைக்காக சீனத்தூதுவர் உள்ளிட்ட குழுவை கிழக்குபல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மலர் மாலை அணிவித்து கலாசாரத்துடன் கூடிய வரவேற்பு அளித்தனர். கிழக்குப்பல்கலைக்கழகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சர்வதேச விவகாரப் பிரிவு இதன் போது சீனத்தூதுவரால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. பின்னர் சீனத்தூதுவருக்கும் துணைவேந்தர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்குமிடையில் கலந்துரையாடலொன்று பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. அத்தோடு குறித்த கலந்துரையாடலின் முடிவில் பல்கலைக்கழகத்தினால் சீனத்தூதுவர் மற்றும் அவரது பாரியாருக்கும் நினைவுச்சின்னம் வழங்கப்பட்டதுடன், சீனத்தூதுவரால் பல்கலைக்கழக நிருவாகத்திற்கும் நினைவுச்சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம்.நூர்தீன்
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

அட்டுளுகம சிறுமி ஆயிஷாவின் கொலைக்கு காரணம் தந்தையின் போதைவஸ்து நண்பர்!

பொலிஸாரின் தீவிர விசாரணையில் மர்மம் துலங்கியது!

தற்போது எமது நாட்டு பிள்ளைகளின் விதி அனைவரினதும் கண்களில் கண்ணீரை வரவழைக்கும் கதைகளையே சுமந்து வருகின்றது. அவ்வாறான துயரம் மிகுந்த சம்பவம் ஒன்று பண்டாரகம அட்டுளுகம பிரதேசத்திலிருந்து எமது காதுகளில் ஒலிக்கின்றது. சிறுவயதில் இருந்தே அடுழுகம பிரதேசத்தில் வசித்த குடும்பமொன்றின் மூன்றாவது பெண் குழந்தையே இவ்வாறான துயரத்திற்கு கடந்த 27ஆம் திகதி முகம் கொடுத்துள்ளது.

நாட்டையே உலுக்கிய அட்டுளுகம பிரதேச 9 வயது சிறுமியின் கொலை தொடர்பில் அடிக்கடி சிறுமியின் வீட்டுக்கு வந்து போகும் 'ஜஸ்' போதைப்பொருள் நண்பர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். 29 வயதுடைய அச்சந்தேகநபர் தானே இக்கொடூரமான கொலையைச் செய்ததாகவும் ஒப்புக் கொண்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் ஜஸ் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும், சிறுமியின் தந்தையுடன் இணைந்து போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் அடிக்கடி சிறுமியின் வீட்டுக்கு வருகை தந்துள்ளமையும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுமி காணாமல் போனதையடுத்து கிராமம் முழுவதும் சிறுமியைத் தேடிய போது, குறித்த நபரும் சிறுமியைத் தேடும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அங்கு பதிவான கமெரா காட்சிகள் பல வெளிப்படுத்துகின்றன.

இதேவேளை கறிவாங்க சென்ற சிறுமி வீதியில் நிற்பதை கண்ட ஒரு பெண் "தனியாக இங்கே ஏன் நிற்கிறாய்?" என்று வினவிய போது "தந்தைக்காக காத்திருக்கிறேன்" என்று அச்சிறுமி சொன்னதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

இது இவ்வாறிருக்கையில், சிறுமி கோழி வாங்குவதற்கு கடைக்குச் சென்று திரும்பாத நிலையிலும், அங்கு கோழிக்கறி சமைக்கப்பட்டிருந்ததாகவும், காலையில் காணாமல் போன பிள்ளை தொடர்பில் பிற்பகல் 2 மணியின் பின்னரே முறைப்பாடு செய்யச் சென்றதாகவும் பிரதேசவாசிகளிடையே தற்போது பேச்சுக்கள் அடிபடுவதை அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் அறியக் கிடைக்கிறது!

ஆனால் மேற்படி கொலையாளி குழந்தை ஆயிஷாவை பாலியல் துஷ்பிரயோகம் எதுவும் செய்து கொலை செய்யவில்லை என்று பரிசோதனை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. அவ்வாறெனில் எதை மறைக்க அல்லது எந்த நோக்கத்துக்காக அவன் குழந்தை ஆயிஷாவை கொலை செய்தான்? இதுவே அறிய முடியாத புதிராக உள்ளது.

பலகோணங்களிலும் விசாரணைகள் தொடர்கின்றன.

ஒன்பது வயதான பாத்திமா அயீஷா அக்ரம், அட்டுலுகம அல்கஸ்ஸாலி மகாவித்தியாலயத்தில் நான்காம் வகுப்பில் கல்வி கற்று வந்துள்ளார். அவர் படித்துக் கொண்டிருக்கும் போது அவரது தாய் அண்மையில் உள்ள கடைக்குச் சென்று கோழி இறைச்சி வாங்கி வரும்படி கூறியுள்ளார்.

பின்னர் தாயிடம் காசையும் பையையும் வாங்கிக் கொண்டு வீட்டில் இருந்து 200 மீட்டர் தூரத்தில் உள்ள கடைக்கு கடந்த 27ஆம் திகதி 10 மணிக்கு சென்றுள்ளார். கடைக்கு சென்று அவர் ஒரு மணித்தியாலமாகியும் மகள் திரும்பி வராததால் பெற்றோர் எங்கும் தேடி விட்டு பண்டாரகம பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

அருகிலுள்ள இடங்களில் அப்பிள்ளையை உறவினர்களோடு தேடியதோடு அவ்வாறு தேடிய பின்னர் கண்டுபிடிக்க முடியாததால் பொலிஸில் முறைப்பாடு செய்ததாக பண்டாரகம பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு தலைவி, பெண் பொலிஸ் பரிசோதகர் ஹேமமாலி கூறினார்.

பின்னர் சிறுமி காணாமல் போனது தொடர்பாக பண்டாரகம பொலிசார் விரைவாக செயல்பட்டு விசாரணைகளை ஆரம்பித்ததோடு, கிடைத்த ஆலோசனைகளின் பேரில் பாணந்துறை தொகுதி குற்ற விசாரணை பிரிவு மற்றும் புலன் விசாரணை அதிகாரிகள் இணைந்து விரிவான விசாரணையை 24 மணித்தியாலங்களாக நடத்தியதாக பொலிசார் தெரிவித்தனர்.

பின்னர் ஆயிஷாவுக்கு என்ன நடந்தது என அறிவதற்காக போலிசாரும் அப்பிரதேச மக்களும் இணைந்து அவர் கோழி இறைச்சி வாங்க சென்ற கடைக்கு சென்ற பாதை, மீண்டும் வீட்டுக்கு வரும் பாதையை ஆராய்வதன் மூலம் தமது தேடுதல்களை ஆரம்பித்தார்கள்.

அந்த நடவடிக்கைகள் கடந்த 28 ஆம் திகதி மாலை வரை நடைபெற்றதோடு ஆயிஷாவின் வீட்டில் இருந்து 150 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள அட்டுலுகம பெரிய பள்ளி என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ள பற்றைக் காடு ஒன்றில் உள்ள சதுப்பு நிலத்தில் பிரதேசவாசிகள் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டார்கள். அங்கு மழைநீரும், கழிவுநீரும் வடிந்தோடும் சிறிய ஓடையில் அவரது சடலம் புதைக்கப்பட்ட இடத்தை பிரதேச மக்கள் கண்டுபிடித்து அதனை போலிசாருக்கு அறிவித்தனர். அதன் பின்னர் போலிசார் உடலை மீட்டார்கள்.

பிரதேசத்தில் பெய்த மழை காரணமாக புதைத்த உடலின் காலின் பகுதி மேலே தெரிந்ததாகவும் அவரின் பாதணிகள் ஓடைக்கு அருகில் கிடந்ததாகவும் அதனைக் கண்ட மூன்று இளைஞர்கள் அந்த ஓடை வழியே தேடிய போது புதைக்கப்பட்ட நிலையில் உடலை கண்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஆயிஷா தனது வீட்டில் இருந்து 250 மீட்டர் தூரம் உள்ள கடைக்குச் சென்று கோழி இறைச்சியை வாங்கிக் கொண்டு திரும்பவும் வீட்டுக்கு வரும் காட்சி பாதுகாப்பு கமராவில் பதிவாகியிருந்ததோடு அதன்படி விசாரணை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிசார் கூறும் விதத்தில் இவரின் மரணம் கொலை என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. பாத்திமா அட்டுலுகம பிரதேச மக்களின் அன்பை பெற்ற குழந்தையாவார். அவர் கல்வி கற்பதில் திறமையானவர். அனைவரிடமும் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் பழகியவர். அவரின் தந்தையான முஹம்மத் அக்ரம் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக இருந்தவர் என்றும், சிறுமி காணாமல் போன வேளையில் அவர் வீட்டில் இருக்கவில்லை என்றும், கடைக்குச் சென்ற மகள் வீட்டிற்குத் திரும்ப வராததால் கலவரமடைந்து பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும் அவரது தாயாரான பாத்திமா மும்தாஜ் தெரிவித்தார்.

அவரின் உடல் கிடைத்த ஓடைக்கு செல்லும் பாதை அவரது வீட்டிற்கு செல்லும் பாதை அல்லவென்றும் வீட்டிற்கு செல்லும் பாதையில் திரும்பிச் செல்லும் ஒரு குறுகிய பாதையிலேயே ஓடை அமைந்துள்ளதாகவும் போலிசார் தெரிவித்தனர். அதனால் குறுக்கு பாதையில் தங்கியிருந்த யாரோ ஒரு நபரே சிறுமியை அந்தப் பாதையில் அழைத்து சென்றமை தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளதாக விசாரணை நடத்தும் பொலிஸார் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தனர்.

ஏதேனும் குற்றம் இழைக்கவோ அல்லது சிறுமியின் கையில் இருந்த பணத்தை கவரும் நோக்கத்துடனோ அதனைச் செய்திருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் சிறுமிக்கு அந்த சதுப்பு நிலத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவரின் பெற்றோர்களிடமிருந்து கிடைத்த சாட்சிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

சிறுமியின் காலணிகள் இருந்த இடத்தையும் சடலம் கிடைத்த இடத்தையும் நோக்கும் போது அவரின் மரணம் குறுக்குப் பாதையில் நடை பெறவில்லை என்றும் ஓடைக்கு செல்லும் பாதையிலேயே நடந்துள்ளதாகவும் சந்தேகம் எழுவதாக போலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

போதைப்பொருள் பாவனைக்காக ஆயிஷாவின் தந்தையைச் சந்திக்க அடிக்கடி வீட்டுக்கு வந்து செல்லும் 29 வயதான இளைஞர் ஒப்புதல் வாக்குமூலம்!

சிறுமியை கொலை செய்ததற்கான காரணம் என்ன?

(நுகேகொட குறூப், ஹல்தொட்ட குறூப் நிருபர்கள்)
தமிழில்: வீ.ஆர். வயலட்

அறவழியில் பொருள் ஈட்டினால் மாத்திரமே வாழ்வில் உண்மையான மகிழ்ச்சி ஏற்படும்

அறவழியில் நின்று பொருள் ஈட்டினாலேயே உண்மையான மகிழ்ச்சி ஏற்படும். அதைவிடுத்து குறுக்கு வழியில் பொருளீட்டி வருகின்ற இன்பம் நிலைக்காது. இவ்வாறு காரைதீவில் முதலாவது சத்சங்கத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தாஜி தெரிவித்தார்.

இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் காரைதீவு ஸ்ரீ சாரதா சிறுமியர் இல்லத்தில் முதல் தடவையாக சத்சங்கம் கடந்த சனிக்கிழமையன்று மாலை நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மகராஜ் ஆகியோர் கலந்து

சிறப்பித்தனர்.

முதலில் சுவாமிகளால் பஜனை மற்றும் சொற்பொழிவுகளுடன் சத்சங்கம் நடத்தப்பட்டது. அங்கு இடம்பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி மேலாளர் சுவாமி நீலமாதவானந்தா மஹராஜ் பஜனை பாடி சிறப்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து இலங்கைக்கான இ.கி.மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தாஜி உரையாற்றுகையில் "இன்று இருக்கின்ற சூழலில் நாங்கள் மனதை ஒருமுகப்படுத்த வேண்டுமாக இருந்தால் சத்சங்கத்தில் ஈடுபட வேண்டும். சத்சங்கம் என்பது நல்லோர் சேர்க்கை என்பதாகும். இதைவிட பல ஆழமான கருத்துக்கள் இருக்கின்றன. இல்லறத்தில் இருப்பவன் முடிந்தளவு சத்சங்கத்தில் ஈடுபட வேண்டும். ஏனென்றால் சம்சார வாழ்க்கையில் பல கவலைகள் தொந்தரவுகள் இடையூறுகள் உள்ளன. கடவுளை வழிபடுவதற்கு நேரம் இல்லாமல் இருக்கும். அதற்காக கடவுளை வழிபடாமல் இருக்ககூடாது.

சத்சங்கம் என்பது நல்லவர்களுடன் தொடர்பு, நல்ல நிகழ்வுகளுடன் நல்ல எண்ணங்களை வளர்ப்போம் என்றெல்லாம் பொருள்படும். மனதுக்கு பயிற்சி வழங்க வேண்டும். ஐம்புலன்களையும் பின்னால் நின்று இயங்குவது மனம். இந்த மனம் ஒருமைப்பட வேண்டுமானால் ஐம்புலன்களுக்கு பல பயிற்சிகளை வழங்க வேண்டும். அவற்றில் ஒன்று 'லிகித ஜபம்' என்று சொல்லப்படுகிறது. இறைவனின் நாமத்தை எழுதிப் படித்தல். எழுதுகின்ற பொழுது ஐந்து புலன்களின் மூன்று குணங்கள் ஒற்றுமைப்படுகின்றன. எனவே இந்த மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டுமாக இருந்தால் இந்த சத்சங்கத்தில் ஈடுபட வேண்டும்.

பகவான் இராமகிருஷ்ணர் கூறுகின்றார் "யாத்திரை போய் வந்தால் அது பற்றிய விடயங்களை ஏனையவர்களுடன் கூற வேண்டும். மீட்க வேண்டும். அதாவது மாடு அசை போடுவது போல அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளை இங்கு கூற வேண்டும்".

ஒரு சத்சங்கத்தில் ஈடுபடுபவர்கள் இங்கு இடம்பெறும் பல அரிய கருத்துக்களை மற்றும் விடயங்களை ஏனையோருக்கும் சொல்ல வேண்டும். நாங்கள் திருப்பதி அல்லது கதிர்காமம் சென்று வந்தால் உறவினர்களுக்கு, அயலவர்களுக்கு பிரசாதம் வழங்குவது போன்று அங்கு இடம் பெற்ற விடயங்களையும் கூற வேண்டும் .

குறுக்கு வழியில் பொருளீட்டி வருகின்ற இன்பம் நிலைக்காது; காரைதீவில் முதலாவது சத்சங்கத்தை ஆரம்பித்து வைத்து இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தாஜி உரை

இன்று மனதை குழப்பம் அடையச் செய்ய பல உபகரணங்கள் வர்த்தக உலகில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கு நாங்கள் பலியாகக் கூடாது. நல்ல எண்ணங்களை விதைத்தால் எமது வாழ்க்கை சிறப்பாக அமையும் .

ஆன்மீகத்தை அத்திவாரமாகக் கொண்டு கட்டி எழுப்பப்பட்டதே இராமகிருஷ்ண மிஷன். அதனால் 125 வருடங்கள் தொடர்ச்சியாக பயணித்து வருகின்றது. சுவாமி விவேகானந்தரால் 1897 மே மாதம் முதலாம் திகதி இந்த மிஷன் ஆரம்பிக்கப்பட்டது. உலகளாவிய ரீதியிலே பல சேவைகளை வழங்கி வருகிறது.

அறவழியில் நின்று பொருள் ஈட்டினால் சந்தோஷம் நிலைக்கும். நாங்கள் தர்மவழி நின்று வாழ முயற்சிக்க வேண்டும். அறம் என்றால் தர்மம். தர்மத்தினை கடைப்பிடித்தால் அது எங்களைக் காப்பாற்றும். தர்மம் தலை காக்கும் என்று சொல்வார்கள். எனவே தர்மத்தின் பால்நின்று நாங்கள் வாழ் வாங்கு வாழ சத்சங்கங்கள் உதவுகின்றன .

இதனை இங்கு மாத்திரமல்ல வாரம்தோறும் வீடுகளிலும் நீங்கள் நிறைய கடைப்பிடிக்கலாம். இந்து சமயத்தின் பால் நின்று ஆன்மீக வழி முறையில் எமது வாழ்க்கையை மாற்றிக் கொண்டால் உண்மையில் நமது வாழ்வு சிறக்கும். இதனையே மகாபாரதம் இராமாயணம் போன்ற இதிகாச புராணங்கள் அழகாக சொல்லுகின்றன. எனவே அற வழியில் நின்று தர்மம் செய்து வாழ முயற்சிக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார். நன்றி உரையை வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்த, நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கு.ஜெயராஜீ மேற்கொண்டார். இந்நிகழ்வில் நிந்தவூர் சிவமுத்துமாரியம்மன் அறநெறி மாணவர்கள் மற்றும் இ.கி.மிஷன் அபிமானிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வி.ரி.சகாதேவராஜா...✍
(காரைதீவு குறூப் நிருபர்)

தினகரனில் சி.வி எழுதிய கட்டுரைத் தொடர் ஆறு தசாப்த காலம் கழித்து நூல் வடிவத்தில்

க.கைலாசபதி அவர்கள் தினகரனில் பிரதம ஆசிரியராக இருந்தபோதுதான் சி.வி.வேலுப்பிள்ளையின் மலையக அரசியல் தலைவர்கள், தளபதிகள் பற்றிய கட்டுரைத் தொடர் வெளியானது. 1958 செப்டம்பர் மாதத்திலிருந்து சி.வி.யின் மலையக அரசியல் கட்டுரைகள் 1959 ஏப்ரல் மாதம் வரை தினகரனில் தொடர்ந்து வெளியாகின.

முதலில் இக்கட்டுரைத் தொடர் கேலிச்சித்திரம் என்று அறிமுகப்படுத்தப்பட்டு அப்துல் அசீஸ், எஸ். தொண்டமான் ஆகியோர் பற்றிய கட்டுரைகள் கேலிச்சித்திரமாகவே ஓவியர் யூனுஸ் அவர்களின் கேலிச்சித்திரத்துடன் வெளியாகின. அச்சித்திரங்கள் கேலிச்சித்திரங்களாக, political caricature/ cartoon என்ற பாணியில் அமைந்திருந்தன. பின்னர் வெளியான அரசியல் தலைவர்கள், தளபதிகளின் கட்டுரைகள் அவர்களின் புகைப்படங்களுடன் வெளியாகின. கேலிச்சித்திரம் என்று அவை குறிக்கப்படாமல் வாழ்க்கைச் சித்திரம், பேனாச்சித்திரம் என்றே குறிக்கப்பட்டன.

'மலைநாட்டுத் தமிழ் மக்கள் தலைவர்கள்' என்ற தலைப்பில் முக்கிய பெரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும், 'மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைப்போர்த் தளபதிகள்' என்ற தலைப்பில் இரண்டாம் நிலைப்பட்ட வளர்ந்துவரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும் வாழ்க்கைச் சித்திரங்களை சி.வி சிறப்பாக எழுதியிருந்தார்.

மலையகத்தின் அரசியல் தளத்தில் இயங்கிய 26 ஆளுமைகள் பற்றிய சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் பதிவு ஆறு தசாப்தங்கள் கழித்து இன்று நூல் வடிவம் பெறுவது இலங்கையின் அரசியல் எழுத்திற்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். மலையகத்தின் அரும்பெரும் ஆவணப்பதிவாளராக (chronicler) சி.வி. ஈழத்து அரசியல் வரலாற்றில் நிலைபெறுகிறார். ஒவ்வொரு அரசியல் தலைவரையும் மிக நுட்பமாக அவதானித்து, அரிய தகவல்களுடன் அந்த அரசியல் ஆளுமைகளின் உள்ளார்ந்த சாரத்தை, அங்கதச்சுவையுடன் அடூர்வமான எழுத்தில் வடித்திருக்கிறார் சி.வி. மலைநாட்டுத் தொழிற்சங்க வரலாற்றின் முன்னோடி கே.நடேசய்யரைப்பற்றி சி.வி. எழுதும்போது, 'தொழிலாளர் எழுச்சியுற்று , உரிமையுடைய மக்களைப் போல் தன்மானத்தோடு நடக்க, ஐயரவர்கள் கற்பித்தார் என்பதனை ஒருபொழுதும் அலட்சியம் செய்ய முடியாது' என்று குறிப்பிடும் அதேவேளை, 'அவருக்கு நல்ல ஆலோசனை கூறுவோர் இருக்கவில்லை. ஆமாம் போடுபவர்கள் மட்டுமே இருந்தார்கள். அவருடைய ஸ்தாபனம் ஒரு திட்டவட்டமான கொள்கையுடையதல்ல. ஆனால், தான் மட்டும் தனியாய் நின்று நாடகத்தை நடத்தினார். அவருடைய சம்மேளனம், அவர் ஏறிச் சென்ற அந்த ரதம் 1947ஆம் ஆண்டில் நொருங்கிச் சிதைந்தது' என்று துல்லியமான மதிப்பீட்டினை முன் வைக்கிறார்.

அப்துல் அசீஸ் அவர்களைப்பற்றி சி.வி.எழுதுகையில், 'அவர் இரண்டு இலட்சம் மக்களின் தலைவர்; ஆயினும் அவர் நெருக்கடியான தருணங்களில் இனித்தான் முக்கிய முடிவுகள் செய்ய வேண்டியவராயிருக்கிறார். புதியவர்களைச் சுலபமாக வசீகரிப்பவர்; ஆனால், அவர்களைத் தம் வசம் வைத்திருப்பதற்கு கஷ்டப்படுவார்' என்று எழுதுகிறார்.

சி.வி. தீட்டிய மலையகத் தலைவர்களின் சித்திரத்தில் வந்து சேர்ந்தவர்களில் இன்றும் எம்மிடையே வாழ்பவராக உள்ளார் பி.தேவராஜ்.

மலையக அரசியலைத் தொழிற்சங்க அரசியலிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. மலையக சமுதாய உருவாக்கத்தில் தொழிற்சங்கங்களே அந்த மக்களின் காவல் அரணாகத் திகழ்ந்திருக்கின்றன. தொழிற்சங்கங்களை அமைப்பதற்கான போராட்டத்திலே இரண்டு இளஞ்சிங்கங்கள் தூக்குக் கயிறை முத்தமிட்டுள்ளன. மலையக மக்களின் மீட்சிக்குக் குரல் கொடுத்த இப்பெருந்தகைகள் எல்லாரும் ஏதோ ஒரு வகையில் தொழிலாளர்களோடும் தொழிற்சங்கங்களோடும் அந்தரங்க சுத்தியோடு உழைத்திருக்கிறார்கள். எளிமையோடு அந்த மக்களுடன் வாழ்ந்திருக்கிறார்கள். சி.வி. வடித்திருக்கும் அந்தப் பெரியார்களின் வாழ்க்கை கனம் பண்ண வேண்டிய பெருமக்களின் வாழ்வாக நம் கண்முன்னே விரிகிறது.

காந்தி, அம்பேத்கார், ராஜாஜி, பண்டிதர் நேரு, பெரியார் ஈ .வே .ரா, ராஜேந்திர பிரசாத், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், கமலாதேவி சட்டோபாத்யாய, டாக்டர் ருக்மணி இலட்சுமிபதி, ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய, முஹம்மது அலி ஜின்னா, கஸ்தூரிரங்க ஐயங்கார், கல்கி, நீதியரசர் சதாசிவ ஐயர், சி.எப்.அன்றூஸ் போன்ற இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களுடனும் பெரியார்களுடனும் உறவு பூண்டிருந்த பேராளுமைகளைக் கொண்ட அரசியல் தலைமை மலையகத்தில் வேரூன்றியிருந்தது என்பதை சி.வி.அவர்களின் இந்த எழுத்துகள் இனங்காட்டுகின்றன. சேர்.பொன் அருணாசலம், தியாகராஜன் செட்டியார், சத்தியவாகீஸ்வர ஐயர், சேர்.ஜேம்ஸ் பீரிஸ்,லாரி முத்துகிருஷ்ணா, டொக்டர் சரவணமுத்து போன்ற பெருந்தகைகளுடனும் சேர்ந்து உழைத்த மலையக அரசியலின் முற்போக்குப் பாங்கினை இந்நூல் வலியுறுத்துகிறது.

அத்தகைய செழுமையான அரசியல் பாரம் பரியத்தை எழுத்திலே வடித்த மலையகத்தின் பெருங் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களுக்கு மலையகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. இத்தகைய ஒரு அற்புதமான பதிவை அவரைப் போன்ற ஒருவரே சாதித்திருக்க முடியும்.

ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு வசனத்திலும் பொருள் பொதிந்த கருத்துகளை, தகவல்களை, புதிய செய்திகளை அவர் வாரி இறைத்துச் செல்கிறார். இந்தக்கட்டுரைகள் 1958/1959 இல் எழுதப்பட்டு, இன்று 63 ஆண்டுகளுக்குப் பின் நூல் வடிவம் பெறுகிறது என்பது, நமது அரும்பெரும் இலக்கியப் பொக்கிஷங்களைப் பேணுவதில் நாம் காட்டும் அசிரத்தையைக் காட்டுகிறது. மலையக மக்களின் அரசியல் தலைவர்கள் குறித்த கட்டுரைத் தொடரை எழுத சி.வி. அவர்களை ஊக்குவித்து, தினகரனில் அதனைத் தொடராக வெளியிட்டு ஒரு சமூகத்தின் பாரிய தேவையை நிறைவு செய்த பேராசிரியர் க.கைலாசபதி அவர்களுக்கு நாம் நன்றி கூறுதல் தகும். 1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களின்பிரஜாவுரிமையை மறுக்கும் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, சுதந்திர இலங்கையில் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் சட்ட வாக்கத்திற்கெதிராக முதல் அரசியல் போராட்டம் மலையகத்திலிருந்துதான் எழுந்தது.1948 ஆம் வருடத்திலிருந்து தொடர்ச்சியாக வந்த மூன்று ஆண்டுகள் சமீப காலச் சரித்திரத்திலே காரிருள் சூழ்ந்த காலம் என்கிறார் சி.வி. தொழிற்சங்கங்களில் உழைத்த தலைவர்களை சி.வி.மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றினார். இறுதிவரை தொழிற்சங்கவாதியாகவே வாழ்ந்து மறைந்த சி.வி. அவர்களுக்கே அந்த போராட்ட அணியின் பெருமையும் வலிமையையும் தெரிந்திருக்கிறது. இன்றைய மலையக அரசியல் தலைவர்கள் பற்றிய மதிப்பீட்டைத் தருவதற்கு ஒரு சி.வி. இல்லை என்ற ஏக்கம் இந்த நூலை வாசித்து முடிக்கையில் எழவே செய்கிறது.



மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரின் வாழ்க்கைச் சித்திரம்

இலங்கை அரசியல்துறை எழுத்தாக்கத்துக்கு கிடைத்த பொக்கிஷம் சி.வி.வேலுப்பிள்ளை

முனைவர் முத்தியானந்தன்...✍

புகையிலைப் பொருட்களை கட்டுப்படுத்தி ஆரோக்கிய சமூகத்தை உருவாக்குவோம்!

புகைத்தலால் ஏற்படும் தீமைகள், புகைப் பொருள் நிறுவனங்களின் விளம்பர நுட்பங்கள், புகைப்பொருள் பாவனை ஆகிய வற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் போன்றவை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதனை நோக்காகக் கொண்டு, ஆண்டுதோறும் மே 31 ஆம் திகதி சர்வதேச புகைத்தல் தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

உலகெங்கிலும் தங்கள் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமையைக் கோருவதும், எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதுமே இதன் பிரதான நோக்கமாகும்.

உலக சுகாதார ஸ்தாபனமானது 2022 ஆம் ஆண்டிற்கான சர்வதேச புகைத்தல் தடுப்பு தினத்திற்கான உலகளாவிய பிரசாரத்தை 'புகைப்பொருள் நமது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல்' என்ற கருப்பொருளின் கீழ் அறிவித்துள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் கூற்றுப்படி, புகைப் பொருள் பாவனையினால் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8 மில்லியன் மக்கள் மரணிக்கின்றனர். புகையிலைப் பொருட்கள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் ஒரு நாட்டிற்குள் சுகாதார பிரச்சினைகளுக்கு பெரிதும் பங்களிக்கின்றன.

சர்வதேச புகைத்தல் தடுப்பு தினம் இன்று

இலங்கையில் கடந்த தசாப்தத்தில் 35,000 மில்லியனுக்கும் அதிகமான சிகரெட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிகரெட் துண்டுகள், உணவுப் பொதிகளுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது அதிக குப்பைகள் நிறைந்த பொருளாக விளங்குகின்றன. மேலும் பல நச்சு இரசாயனங்கள், கன உலோகங்கள் மற்றும் எஞ்சிய நிகோட்டின் ஆகியவற்றைக் கொண்டுள்ள தால் இவை பெரிதும் சூழலுக்கு பாதிப்பை தோற்றுவிக்கின்றன. அவை மிகக் குறைந்த உக்கும் தன்மையும் கொண்டவை. எனவே, சிகரெட் துண்டுகளை முறையற்ற முறையில் ஆங்காங்கே இடுவது பெரும்பாலும் காற்று, நிலம் மற்றும் நீர் மாசுபடுவதற்கு பங்களிக்கிறது.

பயனுள்ள கொள்கை அமுலாக்கத்தின் மூலம் புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்துவதில் ஒரு நாடாக இலங்கை வெற்றியடைந்துள்ளது. இதன் விளைவாக கடந்த தசாப்தத்தில் புகையிலை பாவனையானது கணிசமாகக் குறைந்துள்ளது. இலங்கை, குறைந்த புகைப்பொருள் பாவனையில் முன்னணி நாடாகத் திகழ்கிறது, இது நாட்டிற்குள் நடைமுறைப்படுத்தப்பட்ட புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வெற்றியைக் குறிக்கிறது. இத்தகைய சாதனையுடன், புகைப்பொருள் பயன்பாட்டை மேலும் குறைப்பதற்கும், அதன் மூலம் நாட்டின் சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பு மீதான சுமையைக் குறைப்பதற்கும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் கணிசமான அளவு குறைந்த புகையிலை பாவனை வீதங்கள் பதிவாகியுள்ள போதிலும், பல காரணங்களால் மேலும் புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அமுல்படுத்த வேண்டியுள்ளது. இலங்கையில் சிகரெட்டுக்காக நாளாந்தம் சுமார் 40 மில்லியன் ரூபா செலவிடப்படுவதால் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் சுமையாக மாறியுள்ளது.

புகைப்பொருளானது பாவனையாளர்களிடத்தில் பல நோய்களை ஏற்படுத்துவதால், அது நாட்டின் சுகாதார அமைப்பிலும் தேவையற்ற சுமையை சேர்க்கிறது.

கடந்த காலங்களில், புகையிலை பாவனையை கட்டுப்படுத்த இலங்கை பல முக்கியமான சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது, வரி அதிகரிப்பு உட்பட, அரசாங்கத்திற்கான குறிப்பிடத்தக்க வருமானத்தை அதிகரிப்பதற்கும் பொதுமக்களுக்கான பொது சுகாதார நலன்களுக்கும் வழிவகுத்தது. 2019 ஆம் ஆண்டு முதல் சிகரெட்டுக்கான வரியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காததால் நாடு மிகவும் நெருக்கடியான காலப்பகுதியில் அரசாங்கத்திற்கு ஈட்டக்கூடிய வருமானம் சுமார் 100 பில்லியன் ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது

செப்டம்பர் 2021 இல் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC) நடத்திய ஆய்வில், பதிலளித்தவர்களில் 89.3 வீதம் பேர் அரசாங்க வருவாயை மேம்படுத்த புகையிலை வரியை அதிகரிக்கும் நடவடிக்கையை ஆதரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். புகைபிடித்தல் ஒரு ஒரு சமூகத்தின் பொருளாதார நிலைக்கு நேரடியாக தாக்கம் செலுத்துவதனால், விரிவான புகையிலை கட்டுப்பாட்டு உத்திகளில் புகையிலை வரிவிதிப்பு இன்றியமையாத அங்கமாகும்.

புகைபிடித்தல் மற்றும் அதன் பாதகமான உடல்நல விளைவுகளையும் குறைக்க இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதிகரித்த வரிவிதிப்பின் மூலம், விலைகளை அதிகரிப்பதன் மூலம் புகையிலை பாவனையை குறைப்பதானது புகையிலையால் ஏற்படும் நோய்களை குறைக்கும் மற்றும் இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு முறை மிகவும் சுமையாக உள்ள நேரத்தில் சுகாதார அமைப்பின் மீதான அழுத்தத்தை குறைக்கும். எனவே, இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியிருக்கும் இவ்வேளையில் செயற்படுத்தப்பட வேண்டிய சிறந்த உத்தி, சிகரெட்டுக்கான வரியை அதிகரித்து அரசாங்கத்திற்கு அதிகூடிய வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

நிதர்ஷனா செல்லத்துரை...✍
(மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்)

சஷியின் மேன்முறையீட்டு மனு...

செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை இன்றைய தினம் விசாரணைக்கு எடுக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுப்பதை நீதிமன்றம் நேற்றைய தினம் வரை கடந்த 27 ஆம் திகதி ஒத்திவைத்து உத்தரவிட்டிருந்தது.

சிறையில் வைக்கப்பட்டுள்ள சஷி வீரவங்சவை சிறைச்சாலை அதிகாரிகள் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியிருந்தனர். ஏற்கனவே இந்த வழக்கில் சஷி வீரவங்ச குற்றவாளி என முடிவு செய்த கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் கடந்த 27 ஆம் திகதி இரண்டு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

அத்துடன் ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்த நீதிமன்றம், அதனை செலுத்த தவறினால், மேலும் ஆறு மாத காலம் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது.

நாளை ஜூன் 01 முதலே...

பணியினை தொடர்ந்து விநியோக நடவடிக்கை ஜூன் 01 முதல் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் ஜூன் 1 ஆம் திகதி எரிவாயு அடங்கிய கப்பல்கள் வருகை தரவுள்ளன. எரிவாயு சிலிண்டர் விநியோகம் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

எரிவாயு கொள்வனவிற்காக பொது மக்கள் வரிசையில் காத்திருப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பது...

நாட்களில் ஏனைய மதத்தலைவர்களையும் அறிவூட்ட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அமரபுர மகா நிகாயாவின் பீட தொடம்பஹல சந்தசிறி மகாநாயக்க தேரருக்கு, உத்தேச 21வது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து நீதி அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ வினால் விளக்கமளிக்கப்பட்டது. ,

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் அரசியலமைப்பின் உத்தேச 21வது திருத்தம் தொடர்பில் நீதியமைச்சர் இதன் போது விளக்கமளித்தார். இந் நி கழ்வில் உரையாற்றிய நீதியமைச்ச ர் , நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியமானது.அதற்காக அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு வலுவூட்டல் மற்றும் கொள்முதல் ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு ஆணைக்குழுக்கள் மீள ஸ்தாபிக்க பரிந்துரைசெய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அரசியல் ஸ்திரமின்மை காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியாத வகையில் அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் திருத்தப்படுவதாகவும், மக்கள் நலனுக்காக கொண்டுவரப்படும் இந்த சட்டமூலத்தை மக்கள் பிரதிநிதிகள் எதிர்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டமூலம் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுமெனவும் நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அடுத்த சில நாட்களில், மகாநாயக்க தேரர்கள், அனைத்து மதங்களின் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு சட்டமூலம் தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லாத வகையில் உத்தேச அரசியலமைப்பு 21வது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் புதிய அரசியலமைப்பை உருவாக்க எதிர்காலத்தில் பாராளுமன்ற குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதி கேட்டு போராடிய...

நேற்றைய தினம் மரணமடைந்துள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஈழத் தமிழரின் உறவினர்கள் அமைப்பினால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட செய்தி குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமராட்சி கிழக்கு தாளையடி வடக்கை சேர்ந்த அருளானந்தம் மேரி பற்றிமா என்பவரே திடீர் சுகயீனம் காரணமாக நேற்று மரணமடைந்துள்ளார். இவரின் ஒருபிள்ளை மாவீரர் மற்றொரு பிள்ளை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனான (அருளானந்தம் ஜோன்ஷன் இதயதாஸ்) கடந்த 2009 ம் ஆண்டு முள்ளிவாக்காலில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்ட தனது செல்வமகனை அன்பு தாயாரால் காணமுடியாத நிலையில் அவர் மரணமடைந்துள்ளார்.

கோழி இறைச்சியின் விலை...

கோழிப் பண்ணைகளுக்கு அடுத்த மாதத்திற்கு தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய இறக்குமதியாளர்களுக்கு வங்கிகள் ஊடாக 40 மில்லியன் டொலர்கள் கிடைக்க வேண்டும்.

டொலர்கள் கிடைத்தால், மேலும் ஆறு மாதங்களுக்கு கோழிப் பண்ணை தொழிலை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

எவ்வாறாயினும் தற்போது கோழி முட்டை உற்பத்திகள் 40 வீதமாக குறைந்துள்ளதுடன் கோழி இறைச்சி உற்பத்தி 30 வீதமாக குறைந்துள்ளது. இதன் காரணமாக கோழிப் பண்ணைகளை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக உணவு பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. எதிர்வரும் காலங்களில் மேலும் உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, பஞ்சம் ஏற்படும் சூழ்நிலை உருவாகலாம் என கூறப்படுகிறது.

GCE A/L பரீட்சை முடிவுகள்...

வருவதாகவும் இதற்காக கம்பிகள், ஆளிகள் மற்றும் மின்குமிழ்கள் போன்றவற்றை கொள்வனவு செய்ய பெருந்தொகை பணத்தை செலவிட நேரிட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நாட்களில் நடத்தப்பட்டு வரும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சையில் ஒருவருக்கு பதிலாக மற்றுமொருவர் பரீட்சையில் தோற்றிய சம்பவமொன்று பதிவாகியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜூன் மாத எரிபொருளை...

நந்தலால் விஜேசேகரவிற்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றுள்ளது.

அதற்கிணங்க ஜூன் மாதத்திற்கான எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான டொலரை பெற்றுக்கொள்வது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்திற்கான எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 554 மில்லியன் அமெரிக்கன் டொலர்கள் தேவைப்படும் என இதன்போது அமைச்சர் காஞ்சன விஜேசேகர மத்திய வங்கி ஆளுநரிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த தொகையில் 100 மில்லியன் டொலர்கள் இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் கிடைக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஸ)

பொருளாதார ஸ்திரதன்மையை...

குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவில் முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர் அமரதுங்கவுக்கு மேலதிகமாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, கலாநிதி ஷர்மினி குரே, முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். மங்கள சமரவீர நிதியமைச்சராக பதவி வகித்த காலத்தில் கலாநிதி ஆர். சமரதுங்க நிதியமைச்சின் செயலாளராக செயற்பட்டுள்ளார். அதேவேளை, மத்திய வங்கியின் ஆளுநராக கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி செயற்பட்டார். அதற்கிணங்க கலாநிதி சமரதுங்க பிரசித்தி பெற்ற அரச நிர்வாக அதிகாரியாக அனைத்து தரப்பினரதும் கௌரவத்திற்கு பாத்திரமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ஸ)

புறக்கோட்டை பஸ்...

மற்றுமொருவர் பலத்த காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் இவ்வாறு துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

"21" இல் மேலும் திருத்தங்கள்...

தெரிவு செய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அனுமதி வழங்கப்படுவதற்கும் உத்தேச சட்டத்தை திருத்துமாறு தமது கட்சி ஏற்கனவே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

“பாராளுமன்றத்தில் பக்கம் மாறும் எம்.பிக்கள் தொடர்பான சில சரத்துகளையும் நாங்கள் முன்மொழிந்துள்ளோம்.

அதன்படி நாங்கள் ஒரு திருத்தத்தை முன்மொழிந்துள்ளோம். இதன் கீழ் ஒரு எம்.பியை கடக்கும் ஒரு போர்ட்ஃபோலியோ அல்லது வேறு எந்த வெகுமதியையும் ஏற்றுக்கொள்வது தடுக்கப்படும்.

மேலும் ஒரு எம்.பி கட்சி மாறினால் ஒரு அரசியல் கட்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் தடை உத்தரவை உச்ச நீதிமன்றம் மட்டுமே பிறப்பிக்க முடியும் என்று நாங்கள் முன்மொழிந்துள்ளோம்”என்றும் அவர் மேலும் கூறினார்.

“21வது திருத்தம் திருத்தப்பட்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு உரிய நேரத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி பிரதமரிடம் தெரிவித்துள்ளது” என்றும் அவர் தெரிவித்தார்.

ஜோன்ஸ்டனுக்கு எதிராக...

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இருவரை ஊழல் வழக்குகளில் இருந்து விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் கடந்த ஜனவரி 28ஆம் திகதி உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் எழுத்துமூல அனுமதியுடன் கொழும்பு மேல் நீதிமன்றில் புதிய குற்றப்பத்திரிகையை இலஞ்ச ஆணைக்குழு நேற்று தாக்கல் செய்துள்ளது.

8.4 மில்லியன் நட்டம்

இதன்படி, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, லக் சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகியோருக்கு எதிராக, 2012 காலகட்டத்தில் தேர்தல் பணிக்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் 8.4 மில்லியன் ரூபா சட்ட விரோத நஷ்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை முதலாம் குற்றவாளியான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராக கடமையாற்றிய போது சட்ட விரோதமான முறையில் சதொச ஊழியர்களை தேர்தல் பணிகளுக்காக ஈடுபடுத்தியதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

நீண்ட கால விசா திட்டமான...

03ஆம் பக்கத் தொடர்

இணையதளமும் அங்குரார்ப்பனம் செய்து வைக்கப்பட்டது.

அங்குரார்ப்பன நிகழ்வு உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர்: குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பதில் கட்டுப்பாட்டாளர் நாயகம் பந்துல ஹரிச்சந்திர மற்றும் அவரது பணியாளர்கள் மேற்படி வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க மேற்கொண்ட முயற்சியினைப் பாராட்டினார்.

செயல்முறைகள் எளிமையாக அமையும்போது, அது விண்ணப்பிக்க விரும்புபவர்களை கவரும் எனவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை சிக்கலற்றதாக இருக்கும்போது, அது மேலும் நம்பிக்கைக்குரியதாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் தனது உரையில், இந்தத் திட்டத்தை உரிய நேரத்தில் மதிப்பீடு செய்து, அவசியம் ஏற்படுமாயின் தேவையான மேம்பாடுகளைச் செய்யவும் நாம் எதிர்பார்க்கிறோம், என்றார்.

வெற்றிக்கான பாதை திறந்திருப்பதால், வெற்றியைப் பெறுவதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பிரச்சாரங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்த திட்டம், முதலீட்டாளர்கள் இலங்கை தீவின் நன்மைகளை அனுபவிக்கும் அதே வேளையில் வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கு பங்களித்து பலன்களைப் பெறுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட நீண்ட கால குடியுரிமை விசா திட்டமாகும்,

இத்திட்டத்தின் மூலம் முதலீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் தொடர்ச்சியான நன்மைகளை அனுபவிப்பார்கள் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் யு. கே. பண்டார, வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் விவகார பணிப்பாளர் நாயகம் பிரியங்கா விஜேகுணசேகர, முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரகோன், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இனியும் இவ்வாறான...

03ஆம் பக்கத் தொடர்

நிறுத்தப்பட வேண்டும் என்றும்

குழந்தைகள் உட்பட இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழும் உரிமை இந்நாட்டில் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜம்இய்யா உரிய அதிகாரிகளை கேட்டுக் கொள்கின்றது. இதுபோன்ற சம்பவங்கள் நம் நாட்டில் இதற்கு முன்னர் பல தடவைகள் நிகழ்ந்திருப்பதை நாம் அறிவோம். இது இறுதியானதாக அமைய வேண்டுமென்று நாம் பிரார்த்திப்பதோடு, இதற்குப் பின்னர் இந்நாட்டில் இதே போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா இந்த சிறுமிக்கு அருள்பாலித்து, சிறுமியின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினருக்கு ஈருலகிலும் நலவுகளையும் இறைபொருத்தத்தையும் கொடுத்தருள்வானாக எனவும் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துப் பொருட்களின்...

03ஆம் பக்கத் தொடர்

டொலர் இல்லாத நிலையே காணப்படுகிறது. அரசாங்கம் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பது அவசியம். மருந்து விற்பனை நிறுவனங்களினால் மருந்துகளின் விலை வெகுவாக அதிகரிக்கப்பட்டு வரும் நிலையில் தமது தரப்பினரும் நோயாளிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மருந்துப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் தேசிய ஔடத கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு உள்ளபோதும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாத நிலையிலேயே அந்த அதிகார சபை காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

சௌந்தரி டேவிட்டின்...

03ஆம் பக்கத் தொடர்

டோக்கியோசிமெண்ட், அமிகா ஹோட்டல் மதுரை மற்றும் டெல்மெஜ் அனுசரணயுடனும் லலிதா ஜுவலர்ஸ், Re.pub.lk, செலிங்கோ லைஃப் மற்றும் சோல் சவுண்ட் அகடமியின் ஆதரவுடன் நடைபெறவுள்ளது. ஊடகஅனுசரணை சக்திடீவி மற்றும் சக்தி எஃப். எம். என்பன வழங்குகின்றன. 80 மற்றும் 90 ஆம் ஆண்டுகளில் தமிழ் இசைபிரியர்களின் நெஞ்சங்களைகவர்ந்த இளையராஜா மற்றும் ஏ.ஆர். ரகுமான் மற்றும் தமிழ் இசையமைப்பாளர்களின் இனிய வெற்றிப்பாடல்களை இசைக்க தயாராக உள்ளதுடன் சௌந்தரிடேவிடின் காதலில் எனும் மெல்லிசைபாடல்கள் மற்றும் தனித்துவமான இசைசங்கமத்துடன் சில உன்னத நினைவலைகளை மீட்டெடுக்கும் ஓர் நிகழ்வாகவும் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது.சௌந்தரிடேவிடினால் இலங்கை இசைத்துறைக்கு மேகன் தாக்ஷினி ஷத்ருகன்,அபினேஷ் ரவிச்சந்திரன்,அமான் ரிஃபாய் மற்றும் தனுஜா ஜோசப் வர்கீஸ் ஆகியோர் அறிமுகப்படுத்தப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும். சங்கீதமேகம் இசைநிகழ்ச்சி கொழும்பு எல்ஃபின்ஸ்டன் அரங்கில் ஜுன்மாதம் 05 ஆம் திகதி மாலை5.30மணிக்கு நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் இலங்கை...

03ஆம் பக்கத் தொடர்

நூல்களை வாசிக்கவும், மேலும் நூல்களை அனபளிப்புச் செய்யவும் முடியும். இந் நூலகத்தில் பாகிஸ்தான் இலங்கை சம்பந்தமான பிரயோசனமான நூல்கள் காணப்படுகின்றன. இங்கு உரையாற்றிய உயா் ஸ்தானிகா், இலங்கை பாகிஸ்தான் நட்புறவு இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு நிலவி வருகின்றது. இங்கு உள்ள நூல்களை இலவசமாக வாசிக்க முடியும். நூல்களை அன்பளிப்புச் செய்யவும் முடியும்.

கொழும்பு 7 ரம்மிய பகுதியில் இருந்து இதனை பயன்பெறல் வேண்டும். அத்துடன் இலங்கை பாகிஸ்தன் நாடுகள் பற்றிய கலை கலாசார விழுமியங்களையும் அறிந்து கொள்ள முடியும் என்றார்.

சாதாரண தர பரீட்சை...

03ஆம் பக்கத் தொடர்

பெற்றாலும் எனக்கு வேலை கிடைக்கவில்லை.

ஆத்ம திருப்திக்காக பரீட்சை எழுதுகிறேன். புத்தகங்கள் படிப்பதன் மூலம் அறிவு கிடைக்கிறது. இப்போது பாடத்திட்டம் மாறிவிட்டது. நவீனமயமாக்கப்பட்ட கல்வி முறை உள்ளது.

கடந்த ஆண்டை விட இந்த முறை விஞ்ஞான பாட பரீட்சை கடினமாக உள்ளது. பரீட்சைக்கு அமர்வதோடு மாத்திரம் கற்றலை மட்டுப்படுத்த முடியாது. சாகும் வரை கற்க வேண்டும். கற்றுக் கொள்ளவேண்டியவிஷயங்கள்உள்ளன" என்றார்.

ரயில் முன்பதிவு ஆசன...

நட்டத்தை குறைப்பதற்காகவே கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஒரு ரயில் டிக்கெட்டின் விலை பஸ் கட்டணத்தில் 25% என்றும் அவர் கூறினார்.

புகையிரதத் திணைக்களம் நாளாந்தம் எரிபொருளுக்காக சுமார் 40 மில்லியன் ரூபாவை செலவிட வேண்டியிருந்தாலும், நாளாந்த வருமானம் சுமார் 15 மில்லியன் ரூபாவாகும் என ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

எரிபொருளுக்கு மேலதிகமாக ஏனைய நடவடிக்கைகளுக்கு நாளாந்தம் 30 மில்லியன் ரூபா செலவாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

விமலுக்கு எதிரான...

வழக்கின் விசாரணைகள் எதிர்வரும் ஆகஸ்ட் 29 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

'தும்முல்லை வழக்கு' என பரவலாக அறியப்படும் இந்த வழக்கு நேற்று (30) விசாரணைக்கு வந்த போது, இதற்கான உத்தரவை கொழும்பு பிரதான நீதவான் நனத்தன அமரசிங்க பிறப்பித்தார்.

கறுவாத்தோட்டம் பொலிஸாரால் தொடரப்பட்டுள்ள இந்த வழக்கில், சந்தேகநபர்களாக பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச, ஜயந்த சமரவீர, மொஹமட் முஸம்மில், வீரகுமார திசாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் ரொஜர் செனவிரத்ன ஆகியோர் பிணையில் உள்ள நிலையில் நேற்று மன்றில் பிரசன்னமாகினர்.

உணவு பாதுகாப்பிற்கு...

எக்காரணத்திற்காகவும் பருவப் பயிர் செய்கையை கைவிட வேண்டாம் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாயிகளிடம் கோரியுள்ளார்.

பருவப் பயிர் செய்கை மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய உணவு தட்டுப்பாட்டை தவிர்த்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தொடர்புடைய அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

உரத்தை கொள்வனவு செய்தல், அதனை விநியோகித்தல், முறையான முகாமைத்துவம், தெளிவூட்டுதல், விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பிற்கான தேசிய உரக் கொள்கையொன்றை துரிதமாக உருவாக்குதல் என்பன தொடர்பில் இதன் போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். விவசாயிகளின் விருப்பத்திற்கமைய இரசாயன அல்லது சேதன பசளையை வழங்கி பயிர்ச் செய்கையை முன்னெடுப்பதற்கு விவசாயத்துறை அமைச்சு முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.

அட்டுலுகம சிறுமி...

(04 ஆம் பக்கத் தொடர்)

எவ்வாறாயினும் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார். விசாரணைக்கு ஹொரண பொலிஸாரின் உத்தியோகபூர்வ மோப்பநாயான ட்ரூனோவும் ஈடுபடுத்தப்பட்டதாகவும் அந்நாய் சிறுமி கோழி இறைச்சி வாங்க சென்றதாக கூறப்படும் கடைக்கு அருகில் சென்று நின்று விட்டதாகவும் போலிசார் தெரிவித்தனர்.

தரிசு காணிகளை உடனே பிரித்து...

ஏற்கனவே வாழ்வாதாரம் இல்லாமல் மிகவும் நலிவடைந்த நிலையில் இருக்கும் தோட்டங்களில் வாழும் மக்கள் மத்தியில் உணவு பஞ்சம் ஏற்படலாம். இன்னமும் சில மாதங்களில் பட்டினி சாவு வரலாம். இதை தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.

தோட்டங்களில் காணப்படும் பயிரிடப்படாத தரிசு நிலங்களை பிரித்து, தோட்டங்களில் நிரந்தரமாக உழைக்கும் மக்களுக்கு வழங்கும்படி நான் உங்களை வேண்டுகிறேன். விவசாய அமைச்சின் அனுசரணையும் இவர்களுக்கு வழங்க சொல்லுங்கள். இந்நிலங்களில் குறுகிய காலத்தில் பயன் தரும் விளை பயிர்களை தொழிலாளர்கள் பயிரிட்டு தங்கள் வீட்டு தேவைகளுக்கு பெற்றுக்கொள்வார்கள். அதேபோல் நாட்டின் உணவு தேவைக்கும் இந்த பயிரிடல் பங்களிப்பை வழங்க முடியும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள அவசர கடிதத்தில் கோரியுள்ளார். தனது கோரிக்கை கடிதத்தில் தமுக தலைவர் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

நுவரெலியா, கொழும்பின் அவிசாவளை, பதுளை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, மாத்தளை, களுத்துறை, காலி, மாத்தறை, மொனராகலை, குருநாகலை ஆகிய மாவட்ட பெருந்தோட்டங்களில் வாழும் உழைக்கும் மக்கள் வருமானமின்றி நிர்க்கதி நிலையில் ஏற்கனவே பெருந்துன்பங்களை சந்தித்து வருகிறார்கள். நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியினால், இன்னமும் சில மாதங்களில், உண்ண உணவின்றி நம் நாட்டில் பட்டினி சாவை சந்திக்க கூடியவர்களாக கணிக்க கூடியயோர் பட்டியலில் முதன்மை நிலையில் இருப்போர் இவர்களே.

“தொழிலாளர்கள்” என்ற அடையாளத்தால் இவர்களுக்கு முறையாக சமுர்த்தி கொடுப்பனவுகள் கிடைப்பதில்லை. கிடைக்காத சம்பள கணக்குகள் காரணமாக இவர்கள் வறுமை கோட்டுக்கு கீழே இல்லை என்ற போலி புள்ளி விபரங்கள் காரணமாக இவர்களுக்கு நியாயம் எப்போதும் கிடைப்பதில்லை.

தோட்ட பிரதேசங்களில் நிலவும் வரலாறு காணாத அசாத்திய வறுமை காரணமாக அங்கே தங்களது ஆட்சியின் கீழ் பட்டினி சாவுகள் நிகழ முன்னர் இதை நீங்கள் செய்வீர்களாயின் மிகவும் நன்றி உடையவனாக இருப்பேன் என அவர் தெரிவித்துள்ளார்.

சாணக்கியனின் குற்றச்சாட்டு...

விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மக்கள் வங்கியில் இருந்து நான் அதிக பணம் கடன் பெற்றதாகவும் கடந்த வருடங்களாக ஒரு சதமேனும் திருப்பி செலுத்தவில்லை எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றம் சாட்டியிருந்தார்.

அவர் இந்த குற்றச்சாட்டை பாராளுமன்றத்திலும் தெரிவித்திருந்ததுடன் பின்னர் ஊடக சந்திப்பொன்றின் போதும் தெரிவித்திருந்தார். பாராளுமன்றத்தில் தெரிவித்த விடயத்துக்கு என்னால் நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால் ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கு எதிராக எனக்கு சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன், கோவிட் காலத்திலும் சிரமங்களுக்கு மத்தியில் சிறப்பாக ஆடை தொழிற்சாலைகள் இயங்கின. இன்றும் எனது தொழிற்சாலைகள் இயங்குகின்றன. எனது நிறுவனத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அதிகமாக வேலை செய்கின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்திருப்பது போன்று ஒரு சதமேனும் மக்கள் வங்கியில் இருந்து நான் கடன் பெற்றதில்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க, பிரதமர் பதவிக்கு வந்ததுடன் நான் எடுத்ததாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர் கூறிய அந்த கடன் தொகையை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவித்திருக்கின்றார். இதனை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

நாங்கள் வியாபாரம் செய்கின்றவர்கள். ஆனால் இவ்வாறான கடனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனது கௌரவத்தை பாதிக்கும் வகையில் என் மீது பொய் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுடன் சாணக்கியன் எம்.பிக்கு தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம்.

அதற்காக என்னை இவ்வாறு அவர் கூற முடியாதல்லவா? இதற்காக உரிய நடவடிக்கை அவருக்கு எதிராக எடுக்கப்படும் என்பதை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

மேலும், என்னை திருடர் என தெரிவிப்பதோடு, ரணில் விக்ரமசிங்கவுடன் இருப்பவர்கள் அனைவரும் திருடர்கள் என தெரிவிப்பதற்கு அவர் முயற்சிக்கின்றார். எனவே இந்த பொய்யான குற்றச்சாட்டை அவர் மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும்” என கூறியுள்ளார்.

குற்றத்தை ஒப்புக் கொண்டு...

உட்படுத்தப்படவில்லை என்ற தகவலும் பொலிசாரால் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 27 ஆம் திகதி கோழி இறைச்சி வாங்குவதற்காக அருகில் உள்ள கடைவீதிக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே சிறுமி பாத்திமா ஆயிஷா காணாமல் போயிருந்தார். அதனையடுத்து பிரதேசவாசிகள் சிறுமியை தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது மறுநாள் சிறுமியின் சடலம் அவரது வீட்டுக்கு அண்மையில் உள்ள சதுப்பு நிலத்தில் கிடந்துள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும் களுத்துறை மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் பாணந்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் இணைந்து நடத்திய தேடுதலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்திய வேளையில் தாமே அந்த சிறுமியை கொலை செய்ததாக அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் சிறுமியின் பிரேத பரிசோதனை நேற்று பாணந்துறை வைத்தியசாலையில் நடைபெற்றது. சிறுமியை சகதியில் புதைத்த போது அவர் உயிருடன் இருந்ததாகவும் ஆனால் அவர் மூச்சுவாங்க முயன்றபோது சகதி சுவாசப்பை வரை சென்றுள்ளதாகவும் சட்டவைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மூச்சுத்திணரலால் அவர் உயிரிழந்துள்ளதாக சட்ட வைத்தியர்கள் அறிவித்துள்ளனர். விஜேவீர தலைமையிலான குழுவினர் பிரேத பரிசோதனை நடத்தியுள்ளனர். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கான அடையாளம் எதுவும் கிடையாது எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சிறுமியின் ஜனாசா அட்டுலுகம பெரிய பள்ளிவாசல் மையவாடியில் நேற்று இஷா தொழுகையின் பின் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த சந்தேகநபர் கீரை தோட்டம் ஒன்றின் சொந்தக்காரர் என்றும் அவர் உடலில் சில பகுதிகளில் காயங்கள் காணப்பட்டதாகவும் அவரது வீட்டில் கட்டிலுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சாரம் சேறு படிந்து காணப்பட்டதாகவும் பொலிஸார் ஏற்கனவே தெரிவித்தனர். (ஸ)

திருக்கோவிலில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஆர்ப்பாட்டம்

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

திருக்கோவில் பிரதேசத்தில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர்களின் சங்க உறவுகள் திங்கட்கிழமை (30) திருக்கோ வில் பிரதேசத்தில் கவனயீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்ட மானது திருக்கோவில் பிரதேச தம்பிலுவில் பொதுச் சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக சங்கத் தின் தலைவி தம்பிராசா செல் வராணி தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது தமிழ், ஆங்கில மொழிகளில் சுலோக அட் டைகளை ஏந்தியவாறு தமது கோசங்களை எழுப்பியவாறு சுமார் 20க்கும் மேற்பட்டோர் பிரதான வீதியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டி ருந்தனர்.

இதனைத் தொடர்ந்து சங் கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு தனது கருத்துக் களை வழங்கினார்.

இதனையடுத்து ஆர்ப்பாட் டக்காரர்கள் கலைந்து சென்று இருந்ததுடன், இவ் ஆர்ப்பாட் டத்தை அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர்களின் சங்கத் தலைவி செயலாளர் உபதலைவி மற்றும் அங்கத்தவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மூதூரில் உணவு பயிர்கள் நடுகை

(மூதூர் தினகரன் நிருபர்)

உள்ளூர் மரக்கறிகளான கத்தரி, வெண்டி, பூசனி, பயற்றை, அவரை உள்ளிட்ட மரக்கறிகளையும் மற்றும் மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு பயிரினங்களையும் மூதூர், சம்பூர் கமநலசேவை நிலையத் திற்கு உட்பட்ட தோட்டச் செய்கையாளர்கள் தற்போது பெருமள வில் நடுகை செய்து வருகின்றனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியினை கருத்திற் கொண்டு, நீண்ட காலமாக செய்கை பண்ணப்படாத நிலையில் காணப்பட்ட மேட்டு நில காணிகளில் சேதனப் பசளையினை முற்றாக பயன்படுத்தி இப்பயிரினங்களை நட்டு வருகின்றனர்.

அருகிலுள்ள பாடசாலையில் இணைக்குமாறு ஆசிரியர்கள் கோரிக்கை

(காரைதீவு குறூப் நிருபர்)

எரிபொருள் பிரச்சினை காரணமாக சம்மாந்துறையில் இருந்து இறக்காமம் பாடசா லைகளுக்கு செல்லும் ஆசிரி யர்கள், தங்களை அருகிலுள்ள பாடசாலைக்கு இணைக்கு மாறு கோரி, திங்கட்கிழமை (30) சம்மாந்துறை வலயக் கல்வி பணிமனைக்கு வந்து தமது கோரிக்கை அடங்கிய மகஜரை சம் மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம். எஸ்.சஹதுல் நஜீமிடம் கையளித்தனர்.

"எரிபொருள் விலையேற்றம் காரணமாக இறக்காமம் கிராமத்திற்கு செல்வது கஷ்டம் என்றும் தங்களை சம்மாந்துறையிலுள்ள பாடசாலையில் தற்காலிகமாக இணைக்கு மாறு வேண்டுகோள் விடுத்தனர்.

பதிலளித்த வலயக் கல்விப் பணிப்பா ளர் நஜீம், இது சம்மாந்துறைக்கு மாத்திர மல்ல முழு நாட்டிற்கும் உள்ள பிரச்சினை. உடனடியாக உங்களை சம்மாந்துறையில் இணைக்க முடியாது. உங்களை நம்பியுள்ள இறக்காமம் மாணவர்களை சற்று சிந்தித்து பாருங்கள். நீங்கள் முகாமைத்துவ உதவியா ளர் போன்ற அல்ல. நீங்கள் ஆசிரியர்கள். எனவே தற்காலிகமாக நீங்கள் சில கஷ்டங் களை துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எனினும் நீங்கள் கூறிய வண்ணம் இங்கிருந்து காலையிலேயே இறக்காமம் செல்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டி ஒன்றை ஒழுங்கு செய்வதாக வும் மேலும் வரவு பதிவுக்கான கைவிரல் அடையாள பதிவை தற்காலிகமாக நிறுத்துவ தற்கு அதிபர்களுக்கு உத்தர விடுவதாகவும் பணிப்பாளர் உறுதியளித்தார்.

நியமன கடிதம் வழங்கி வைப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், பயிலுனராக இணைக்கப் பட்டிருந்த பல நோக்கு அபிவி ருத்தி உதவியாளர்களில் முதல் கட்டமாக 4 பயிற்சியாளர்க ளுக்கான நிரந்தர நியமன கடிதம் வழங்கும் நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், பல் நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்கள பிரிவின் நிலையப் பொறுப்பாளரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான எஸ். சைறூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2023ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்ளல்

2023ஆம் வருடத்தில் பொல்பித்திகம பிரதேச சபையின் வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு இயைபாக அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்கள் மற்றும் சமூக அமைப்புகளிடமிருந்து அதிகாரப் பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு இயைபான முன்மொழிவுகளை 2022 ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

எல்.ஆர். ரஞ்சித் விஜேநாயக்க,
தலைவர், பொல்பித்திகம பிரதேச சபை,
தொலைபேசி இலக்கம் - அலுவலகம்: 0372273082

Nestlé Lanka PLC இன் வருடாந்த பொதுக்கூட்டம் தொடர்பாக அதன் அனைத்து பங்குதாரர்களுக்குமான அறிவித்தல்

Nestlé Lanka PLCஇனது அனைத்து பங்குதாரர்களினதும் கவனத்திற்கு கடந்த ஏப்ரல் மாதம் 26ம் திகதி 2022 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க, நிறுவனமானது அதன் வருடாந்த பொதுக்கூட்டத்தை எதிர்வரும் ஜூன் மாதம் 9ம் திகதி 2022 அன்று காலை 10 மணிக்கு இணையத்தினூ டாக நடாத்த தீர்மானித்துள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கையானது, பதிவு செய்யப்பட்ட பங்குதாரர்களுக்கு தபால் மூலமும் மின்னஞ்சல் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, மேலும் கொழும்பு பங்கு பரிவர்தனை இணையதளத்தினூடாகவும் (www.cse.lk), நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாகவும் இதனைப் பார்வையிடலாம் (https://www.nestle.lk/investors/key-facts-and-figures). கடந்த ஏப்ரல் மாதம் 26ம்திகதி 2022 அன்று வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் இப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முறைமைகள் விளக்கப்பட்டுள்ளன.

பின்வரும் இணைப்பினூடாகவோ அல்லது எமது பெருநிறுவன இணையதளத்தினூடாகவோ (www.nestle.lk) நீங்களும் இவ்வருடாந்த பொதுக்கூட்டத்தில் பங்குகொள்வதற்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
https://forms.office.com/r/FtzyHVJSns

மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கம் அல்லது மின்னஞ்சல் முகவரியினூடாக தொடர்பு கொள்ளவும்.
0114794595 -keerthi.pathiraja@lk.nestle.com

Nestlé Lanka PLC
பணிப்பாளர் சபை சார்பில்
கீர்த்தி பதிராஜா, காரியதரிசி

மில்கோ (பிரைவட்) லிமிட்டட்

(கால்நடைகள், பண்ணை மேம்படுத்தல் மற்றும் பாற்பண்ணை மற்றும் முட்டை சார்ந்த உற்பத்திகள் இராஜாங்க அமைச்சுடன் இணைக்கப்பட்டது)

பால் சேகரிப்பு, உற்பத்திகள் மற்றும் 'ஹைலன்ட்' வனிக உரிமை மகுடத்தின் கீழ் நாடளாவிய ரீதியிலான விற்பனையுடன் ஓர் பரந்த வலையமைப்பைக் கொண்ட, உள்ளூர் பால் பண்ணை உற்பத்தியில் முன்னணி நிறுவனம் மில்கோ ஆகும். அது கொழும்பு, திகன, அம்பேவல மற்றும் பொலன்னறுவையில் அமைந்துள்ள நான்கு பால் தயாரிப்பு தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது. எமது குழுவில் இணைந்து கொள்ள சுறுசுறுப்பான திறமையான நபர்களை நாம் எதிர் பார்க்கின்றோம்.

பொறியியல் உதவியாளர் (இயந்திரவியல் /Ref.) (MA 2-3)

தகைமைகள் : முன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும், தேசிய கல்விசார் தகைமை மட்டம் 5 இற்கு குறையாது இயந்திரவியல் (Ref. பொறியியல் துறையில் ஓர் தேர்ச்சிச் சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல் மற்றும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பொறியியல் துறையில் ஒரு வருட அனுபவம்.
(கணனி தேர்ச்சி ஓர் தேவைப்பாடும் தகைமையாகக் கருதப்படும்)

வயது : 18- 45 வருடங்கள்

சம்பளம் மற்றும் சலுகைகள் : ரூ. 31,510/- (31,510- 445x10 - 660x11 - 730x10 - 750x10 - 58,020) மற்றும் கம்பனியினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய சலுகைகள்.

Ref. இயந்திரவியல் (PL - 3)

தகைமைகள் : முன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும், தேசிய கல்விசார் தகைமை மட்டம் 4 இற்கு குறையாது Ref. இயந்திரவியலாளராக தேர்ச்சி சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல்.

வயது : 18- 45 வருடங்கள்

சம்பளம் மற்றும் சலுகைகள் : ரூ. 26,290/- (26,290- 270x10 - 300x10 - 330x10 - 350x12 - 39,490) மற்றும் கம்பனியினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய சலுகைகள்.

மின்னியலாளர் (PL - 3)

தகைமைகள் : முன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும், தேசிய கல்விசார் தகைமை மட்டம் 4 இற்கு குறையாது ஓர் மின்னியலாளராக தேர்ச்சி சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல்.

வயது : 18- 45 வருடங்கள்

சம்பளம் மற்றும் சலுகைகள் : ரூ. 26,290/- (26,290- 270x10 - 300x10 - 330x10 - 350x12 - 39,490) மற்றும் கம்பனியினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய சலுகைகள்.

லேத்மன் (PL - 3)

தகைமைகள் : முன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும், தேசிய கல்விசார் தகைமை மட்டம் 4 இற்கு குறையாது ஓர் லேத்மன் தேர்ச்சி சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல்.

வயது : 18- 45 வருடங்கள்

சம்பளம் மற்றும் சலுகைகள் : ரூ. 26,290/- (26,290- 270x10 - 300x10 - 330x10 - 350x12 - 39,490) மற்றும் கம்பனியினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய சலுகைகள்.

Fitter (இணைப்பாளர்) (PL - 3)

தகைமைகள் : முன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்சார் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும், தேசிய கல்விசார் தகைமை மட்டம் 4 இற்கு குறையாது ஓர் இணைப்பாளராக தேர்ச்சி சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல்.

வயது : 18- 45 வருடங்கள்

சம்பளம் மற்றும் சலுகைகள் : ரூ. 26,290/- (26,290- 270x10 - 300x10 - 330x10 - 350x12 - 39,490) மற்றும் கம்பனியினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய சலுகைகள்.

கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதி இயக்குநர் (PL - 2)
(Effluent Treatment Plant Operator (PL - 2)

தகைமைகள் : முன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும், தேசிய கல்விசார் தகைமை மட்டம் 4 இற்கு குறையாது ஓர் கழிவு நீர் சுத்திகரிப்பு தொகுதி இயக்குநராக சேதர்ச்சி சான்றிதழை பெற்றுக்கொண்டிருத்தல்.

வயது : 18- 45 வருடங்கள்

சம்பளம் மற்றும் சலுகைகள் : ரூ. 25,750/- (25,750- 270x10 - 300x10 - 330x10 - 350x12 - 38,950) மற்றும் கம்பனியினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய சலுகைகள்.

பொயிலர்மேன் (Boilerman) (PL - 2)

தகைமைகள் : க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருத்தல் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தரம் I பொயிலர் சான்றிதழ்

வயது : 18- 45 வருடங்கள்

சம்பளம் மற்றும் சலுகைகள் : ரூ. 25,750/- (25,750- 270x10 - 300x10 - 330x10 - 350x12 - 38,950) மற்றும் கம்பனியினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய சலுகைகள்.

இந்த விளம்பரம் பிரசுரமாகிய பின் 07 நாட்களுக்குள் கீழே குறிப்பிடப்படும் முகவரியை அடையுமாறு பதிவுத் தபாலில், இரண்டு உறவினரல்லாத பரிந்துரைப்பவர்களின் பெயர் மற்றும் தொடர்பு இலக்கத்தைக் கொண்ட அவர்களது சுயதரவுகளை விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்கலாம். தயவு செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பதவியை' குறிப்பிடுங்கள்

முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்
மில்கோ (பிரைவட்) லிமிட்டட்
மில்லேனியம் டவர்,
இல. 345-7/1, காலி வீதி, கொழும்பு- 03.

கேள்விக்கான அழைப்பு

வைத்தியசாலைகளை வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்காக மருத்துவம் அல்லாத உபகரணங்களை கொள்வனவு செய்தல்

சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு

சுகாதார சேவைத்திணைக்களம்

பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை

மாத்தளை பிரதேச சேவைப் பணிப்பாளர் பணிமனையின் பெறுகைக் குழுத் தலைவரால் வைத்தியசாலைகளை வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்கு தேவையான மருத்துவம் அல்லாத உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

	Item Name	Qty.
01	Server Computer	01
02	3KVA Online UPS	01
03	16 port Network Switch	01
04	Table	01
05	1.2 KVA UPS	01
06	LED Monitor	01
07	Wireless Network Access Point	04
08	Patch Cable - 3m	05
09	RJ 45 Face Plate	40
10	Cat 06 Network Table (30m) Box	02
11	RJ 45 Connectors	40
12	Keystone Jack	10
13	Network Cable Tester	01
14	RJ 45 Crimping Tool	01
15	Punch Down Tool	01
16	Stripper	01
17	Plug protective cover RJ 45 Cao Boots	50
18	Flexible cable hose 3/4" (Meter)	18
19	PVC Casing 1" (meter)	460
20	Sunk Box	10
21	13A Wall Socket	10
22	3 Core Wire (meter)	105
23	Wall Plug with Cap No. 07 mm 35 mm	200
24	13A Plug Top	10

01. கேள்விதாரர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளை வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்கு தேவையான மருத்துவம் அல்லாத உபகரணங்களை வழங்குவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2022.05.31 முதல் 2022.06.22 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 பி.ப.3.00 வரை எம்சி வீதி மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெறும்.

02. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்காக ஒரு பட்டியலுக்கு மீளளிக்கப்படாத ரூ.3000.00 தொகையை மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் காசாளரிடம் காசாக செலுத்தி பெற்றுக்கொள்ளட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வியுடன் முழுப் பெறுமதியில் 02% கேள்விப் பிணையொன்றை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் மாத்தளை பெயரில் பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை முறையாகப் பூர்த்தி செய்து வேறுவேறு உறைகளில் இட்டு சகலதையும் ஒரே உறையில் இட்டு அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வைத்தியசாலைகளை வலையமைப்பிற்கு உட்படுத்துவதற்காக மருத்துவம் அல்லாத உபகரணங்களை வழங்குதல் என குறிப்பிடுதல் வேண்டும்.

05. சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள், 2022 ஜூன் 23ஆம் திகதி மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும் இதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு இத்தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள் 066-2222326/0662222734

06. கேள்விக்கு முன்னரான கலந்துரையாடல் 2022.06.15ம் திகதி மு.ப.10.00 இற்கு மாத்தளை பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

தலைவர்
பெறுகைக்குழு,
பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை
மாத்தளை
2022.05.31ம் திகதி



பெறுகை அறிவித்தல்

பண்டாரவளை மாநகர சபைக்குரித்தான சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதியின் கடை அறைகளை குத்தகைக்கு விடுதல்

பண்டாரவளை மாநகர சபைக்குரித்தான பண்டாரவளை சீவளி வீதி ஆரம்பமாகும் இடத்திற்கு இணைந்தாற்போல் நிர்மாணப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ள பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களை 30 வருட நீண்ட கால குத்தகைக்கு விடுவதற்கு குத்தகைதாரர்களைத் தெரிவு செய்வதற்காக 2022.06.21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன.

02. பெறுகை விலைக்கோரல் படிவங்களை, 2022.06.01ஆம் திகதி முதல் 2022.06.20ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பண்டாரவளை மாநகர சபைக்கு 01ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனைகள் இரு பிரதிகளில் வழங்கப்படுவதுடன் இந்த கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனைகளை மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியென வெவ்வேறான உறைகளில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் ஆதனமான சீவளி வீதி சந்தைக் கட்டிடத் தொகுதியின் கடை அறைகள் எனக் கட்டாயம் குறிப்பிட்டு அவ்விரு பிரதிகளையும் தனியொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் கடை இலக்கத்தைக் கட்டாயமாகக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறித்து 2022.06.21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, "தலைவர், கேள்விச் சபை, மாநகர சபை, பூங்கா வீதி, பண்டாரவளை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

03. 2022.06.21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இந்த அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் கேள்விகள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். மேலதிக விபரங்களை பண்டாரவளை மாநகர சபையின் 057-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

நிபந்தனைகள்

01. விலைமனு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை / சாரதி உரிமம் / செல்லுபடியாகும் கடவுச்சீட்டைக் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கடை அறைகளுக்காக பெறுகை விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட கடை அறைகளுக்கு விண்ணப்பிப்பதாயின் வெவ்வேறாக அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அதற்காக மேற்குறிப்பிடப்பட்ட படிவக் கட்டணத்தை வெவ்வேறாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அக்கேள்விப் படிவங்கள் 02ஆம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்ட வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கடை அறைகளை பெற்றுக்கொள்வதற்கு ஒவ்வொரு இலக்கம் சகிதமான கடை அறைகளுக்காக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகூடிய கேள்வி வரை கவனத்திற் கொள்ளப்படும் என்பதுடன் இதன் பொருட்டு அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வைப்பொன்றை ரொக்கப் பணமாக 2022-06-20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் பண்டாரவளை மாநகர சபைக்கு வைப்புச் செய்து அதன் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பெறுகை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது உங்களால் திருத்தங்கள் செய்யப்பட்டால் பெறுகை விண்ணப்பதாரரின் சிற்றொப்பத்தை இட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

05. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்காக பண்டாரவளை மாநகர சபையின் கேள்வியின் ஊடாக கடைகள் அல்லது வேறு ஆதனத்தை குத்தகைக்குப் பெற்றுக்கொண்டிருந்தால் உடன்படிக்கையின் பிரகாரம் வெற்றிகரமாக உடன்படிக்கை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து பண்டாரவளை நகர சபையின் விசுவாசத்திற்கு பங்கம் ஏற்படுத்தாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் கேள்விகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வரை பண்டாரவளை மாநகர சபைக்கு எவ்வித நிலுவைத் தொகையையும் செலுத்த வேண்டியவராக இல்லாதிருத்தல் வேண்டும்.

06. ஒவ்வொரு கடை அறைக்காகவும் திறக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் மதிப்பீட்டுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்பதுடன் அதன் பரிந்துரைகளுக்கமைய தெரிவு செய்யப்படும் கேள்விதாரருக்கு அது பற்றி அறிவிக்கப்படும் என்பதுடன் அந்த அறிவித்தலின் பின் ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வித் தொகையின் (மீளளிக்கப்படாத) 50% தொகையை மாநகர சபைக்குச் செலுத்தி குத்தகை உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தி முடிக்கப்படல் வேண்டும்.

07. ஏற்கனவே பண்டாரவளை மாநகர சபைக்குரித்தான கடை அறை அல்லது வேறு குத்தகையொன்றைப் பெற்றுக் கொண்டுள்ள விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படும் பெறுகை விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படுவதானது அவர்களினால் குறித்த குத்தகை தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய குத்தகை அல்லது வாடகையை பெறுகை பொறுப்பேற்கப்படும் தினத்திற்கு முன்னர் முடிவடைந்த மாதம் வரை நிலுவையின்றி செலுத்தப்பட்டிருந்தால் மாத்திரமேயாகும்.

08. தெரிவு செய்யப்பட்டுள்ள கேள்விதாரருக்கு அறிவிக்கப்பட்டதன் பின் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் குறித்த தொகையைச் செலுத்தி உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் அவரால் அவ்வாறு உடன்படிக்கையொன்றுக்கு உள்ளாக முடியாது போனால் அவரால் வைப்புச் செய்துள்ள மீளளிக்கப்படும் வைப்புத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.

09. ஒவ்வொரு கடை அறைக்காகவும் தெரிவு செய்யப்பட்ட குத்தகைதாரர் மீளளிக்கப்படாத கேள்வித் தொகைக்குப் புறம்பாக சபையினால் தீர்மானிக்கப்படும் மாதாந்த கடை வாடகையையும் சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

10. கிடைக்கப்பெற்ற கேள்விகளுக்கிடையில் தகுதியான கேள்வியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது அனைத்து கேள்விகளையும் நிராகரிக்கும் முழுமையான உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

11. இந்த நிபந்தனைகளுக்குப் புறம்பாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரை மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் கேள்விதாரார் இணங்குதல் வேண்டும்.

அட்டவணை இல. 1

தொ. இல.	ஆதனத்தின் விபரம்	கடை இலக்கம்	ஆகக் குறைந்த கேள்வி	மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா)	மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (ரூபா)
01.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (தரை மாடி)	GF - 02	7,020,000.00 எழுபது இலட்சத்து இருபதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
02.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (தரை மாடி)	GF - 09	9,090,000.00 தொண்ணூறு இலட்சத்து தொண்ணூறாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
03.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (தரை மாடி)	GF - 10	9,090,000.00 தொண்ணூறு இலட்சத்து தொண்ணூறாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
04.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (முதலாம் மாடி)	FF - 05	6,010,000.00 அறுபது இலட்சத்து பத்தாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
05.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (முதலாம் மாடி)	FF - 09	8,040,000.00 எண்பது இலட்சத்து நாற்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
06.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (இரண்டாம் மாடி)	SF - 01	4,040,000.00 நாற்பது இலட்சத்து நாற்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
07.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (இரண்டாம் மாடி)	SF - 02	4,090,000.00 நாற்பது இலட்சத்து நாற்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
08.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (இரண்டாம் மாடி)	SF - 06	5,025,000.00 ஐம்பது இலட்சத்து இருபத்தையாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
09.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (இரண்டாம் மாடி)	SF - 07	6,080,000.00 அறுபது இலட்சத்து எண்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
10.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (இரண்டாம் மாடி)	SF - 08	6,050,000.00 அறுபது இலட்சத்து ஐம்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
11.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (இரண்டாம் மாடி)	SF - 09	6,050,000.00 அறுபது இலட்சத்து ஐம்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
12.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (இரண்டாம் மாடி)	SF - 10	6,080,000.00 அறுபது இலட்சத்து எண்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
13.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 02	4,090,000.00 நாற்பது இலட்சத்து தொண்ணூராயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
14.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 03	5,010,000.00 ஐம்பது இலட்சத்து பத்தாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
15.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 04	5,010,000.00 ஐம்பது இலட்சத்து பத்தாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
16.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 05	5,010,000.00 ஐம்பது இலட்சத்து இருபத்தையாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
17.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 06	5,075,000.00 ஐம்பது இலட்சத்து எழுபத்தையாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
18.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 07	6,025,000.00 அறுபது இலட்சத்து எண்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
19.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 08	6,050,000.00 அறுபது இலட்சத்து ஐம்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
20.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 09	6,050,000.00 அறுபது இலட்சத்து ஐம்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
21.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (மூன்றாம் மாடி)	TF - 10	6,080,000.00 அறுபது இலட்சத்து எண்பதாயிரம்	100,000.00 ஒரு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்
22.	சீவளி வீதி சந்தைக் கட்டிடத்தொகுதி (நான்காம் மாடி) (மண்டபத்தின் சுவர்களை கேள்விதாரரின் விருப்பத்தின்படி மாநகர சபையின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் அவரின் செலவில் செய்து கொள்ளலாம்)	FF - 01	40,000,000.00 நான்கு கோடி	400,000.00 நான்கு இலட்சம்	20,000.00 இருபதாயிரம்

2022-05-26ஆம் திகதி,
மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை.

ஜனக நிஷாந்த ரத்நாயக்க,
(நகர பிதா),
தலைவர்,
கேள்விச் சபை,
பண்டாரவளை மாநகர சபை.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பாக அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் (EOM&M D) பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

அம்ச இல.	ஒப்பந்த இலக்கம்	ஒப்பந்தப் பெயர்	ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்காட்டி நாட்களில்)	விலைமனுப் பிணை முறி ரூபா
01	RDA/EOM&M/ GOSL/CLS/ CEP/2021/46	மத்திய அதிவேக வீதியில் (CEP-II) EOM&M பிரிவின் மீரிகம முதல் குருநாகல் வரையான பகுதிக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்	365	150,000.00

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை, தேவைப்படின், பணிப்பாளர் (EOM&M), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். [தொலைபேசி: 011-3047806. தொலைநகல்: 038-2289560]

5. குருநாகல், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு, இடம்மாறல் அலுவலகத்தில் 2022.06.17ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் இந்த விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்வது கட்டாயமாகும். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமை விலைமனுவின் தகுதியிழப்புக்கு வழிவகுக்கும் / ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு தகுதியீனமாகும்.

6. 2022.05.30ஆம் திகதியிலிருந்து 2022.06.23ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 8,000.00 ரூபா + **640.00 (**பெசேவ) ரூபாவைச் செலுத்திய பின்னர், கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், முகவர் மற்றும் இக்கேள்வியின் சித்திகரமான வெற்றியாளர்கள் கம்பனிகளின் பதிவாளரின் திணைக்களத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைக்கோரல் தரவில் தரப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2022-10-21ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

8. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.09.23ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெறுகைக் குழு, மே/பா பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், EOM&M பிரிவு, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைக்கோரலில் கலந்து கொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9. விலைமனுக்கள் 2022.09.23ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

தலைவர்
அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக்குழு,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கஹட்டகஹஹேன, வல்கம,
பண்டாரகம.

பொதுமக்கள் கருத்துக்களுக்கான இலங்கை கட்டளைகள் வரைவு

1. மனிதப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் நீரைச் சுத்திகரிப்பதற்கு பயன்படுத்தும் சோடியம் ஹைபொக்லோரைட்டிற்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு **(DSLS ……..: ……..)**
2. பெண்கள் உள்ளாடையில் வைக்கப்படும் ஒரு முறை மாத்திரம் பாவிக்கக்கூடிய ஈரத்தை உறிஞ்சும் பேட்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு **(DSLS ……..: ……..)**
3. சேதன திரவ உரத்திற்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு (முதலாம் திருத்தம்) **(DSLS 1702: ……..)**
4. சுவையூட்டப்பட்ட பானக் கலவை தூள்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு (முதலாம் திருத்தம்) **(DSLS 668: ……..)**
5. மிளகு விதை மற்றும் தூள்களுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு
பகுதி 2: வெள்ளை மிளகு
(மூன்றாம் திருத்தம்) **(DSLS 105: ……..)**
6. சிறந்த கமத்தொழில் செயற்பாட்டிற்கான **(GAP)** இலங்கை கட்டளைகளுக்கு இயைபான திருத்த வரைவு இல. 01 மூன்றாம் பகுதி: கிராம்பு, மிளகு மற்றும் கோப்பி
(DSLS 1523: பகுதி 3: 2020)
7. சிறந்த கமத்தொழில் செயற்பாட்டிற்கான **(GAP)** இலங்கை கட்டளைகளுக்கு இயைபான திருத்த வரைவு இல. 01 நான்காம் பகுதி: கொக்கோ, சாதிக்கா மற்றும் கிராம்பு
(DSLS 1523: பகுதி 4: 2020)
8. உறிஞ்சும் பருத்திப் பஞ்சுக்கான இலங்கை கட்டளைகளுக்கு இயைபான திருத்த வரைவு இல. 01 மூன்றாம் பகுதி: கிராம்பு, மிளகு மற்றும் கோப்பி
(DSLS 285: 1998)
9. பிளாஸ்டிக் - மீள்சுழற்சி செய்யப்பட்ட இணைந்த மர பிளாஸ்டிக்கிற்கான இலங்கை கட்டளை வரைவு
முதலாம் பகுதி: விபரக்குறிப்பு
(DSLS ……..: ……..) (ISO 20819-1:2020)
10. தீயணைப்பிற்காக பயன்படுத்தப்படும் ஹோஸ் குழாய் - இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் உறிஞ்சும் ஹோஸ் குழாய் மற்றும் ஹோஸ் குழாய் இணைப்புகளுக்கான இலங்கை கட்டளை வரைவு
(DSLS ……..: ……..) (ISO 14557:2021)
11. இறப்பர் பட்டிகள் - பொதுவானவை மற்றும் பரிசீலனை முறை தொடர்பான இலங்கை கட்டளை வரைவு
(DSLS ……..: ……..) (ISO 22843:2020)
12. பொதுவான பாவனைக்கான ஒரு முறை மட்டும் பயன்படுத்தக்கூடிய இறப்பர் கையுறைகள் தொடர்பான இலங்கை கட்டளை விபரக்குறிப்பு வரைவு (முதலாவது திருத்தம்)
(DSLS 1623: ……..) (ISO 25518:2021)

மேற்குறிப்பிடப்பட்ட கட்டளைகள் வரைவுகளுக்கான பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய குழுக்களிடமிருந்து கருத்துக்களை இலங்கை கட்டளைகள் நிறுவனம் அழைக்கின்றது.

இந்த கட்டளை விபரக்குறிப்புகள் மற்றும் திருத்த வரைவுகள் இலங்கை கட்டளைகளுக்கு அமைவானவை என இறுதியாக்கப்படுவதற்கு முன் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் இயைபுடைய குழுவினால் கிடைக்கப்பெற்றுள்ள கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டு இறுதி திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட 01 முதல் 08 வரையான கட்டளை வரைவுகள் மற்றும் திருத்தக் கட்டளை வரைவுகள் இந்த நிறுவனத்தின் விஞ்ஞானபூர்வமான தரப்படுத்தல் பிரிவில் அல்லது இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆவணமாக்கல் மற்றும் தகவல் பிரிவிலிருந்து மேற்படி கட்டளைகள் வரைவின் பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம் மற்றும் www.slsi.lk எனும் இணையதளத்திலிருந்தும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிடப்பட்ட 09 முதல் 12 வரையான வரைவுகளை இந்த நிறுவனத்தின் நூலகத்தில் கொள்வனவு செய்யலாம்.

சகல கருத்துக்களையும் 2022-07-31ஆம் திகதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை கட்டளைகள் நிறுவனம்,
இல. 17, விக்டோரியா பிளேஸ்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08.

தொ.பே. 011-2671567-72
மின்னஞ்சல்: dg@slsi.lk
இணையதளம்: www.slsi.lk
முகநூல்: https://www.facebook.com/officialSLSI

இலங்கை கட்டளைகள் வரைவு நிறுவனம்
தொழில்நுட்ப அமைச்சு

The largest Job Market in Sri Lanka
www.observerjobs.lk
Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information 0777270012 / 0112429314



அருளின் தஞ்சம்

அருள் தரும் அன்னை
அழைத்தனள் என்னை
நான் எழுதும் கவிதை
அவள் தந்த அறிவினில்
உயிர்ப்பளித்த கவிதை!

மோர்கார சிறுவனுக்கு முடம்
நீக்கி வாழ்வளித்தாய்
பால்கார சிறுவனுக்கோ
பக்கம் வந்து காட்சி தந்தாய்
அலை மோதும் கடல் நடுவே
அன்றடித்த புயல் அருகே
தத்தளித்த கப்பலையே
தாங்கி கரை சேர்த்தாயே..!

அருளே பொருளே அழகே
அமுதே! நித்தம் உன்னை
பற்றி தொழுதிட என்
மூச்சுகாற்றாய் இருப்பாய்!
உன் பார்வை ஒன்றே போதும்
எங்கள் அன்னையே
உந்தன் பாதம் கண்டு
போற்றி கவி எழுதிட
வந்தேன் உன்னையே!

உந்தன் அன்பின் உச்சம்
இல்லை என்றும் எல்லை
உந்தன் நெஞ்சம் தந்து
தஞ்சம் தந்தால்தீரும்
எம் வாழ்வின் தொல்லையே!

தீராத நோய்களெல்லாம்
உந்தன் பார்வை தீர்க்கும்
வாராத இன்பமெல்லேம்
வந்து என்னை சேருமம்மா
தாராயோ உன் அருளை
நான் தஞ்சமம்மா உன் மடியில்

அந்துவன்

அமைதி கலாசாரத்தை கட்டியெழுப்ப மதத் தலைவர்கள் உதவ வேண்டும்

திருத்தந்தை பிரான்சிஸ்

மனித வாழ்வின் அனைத்துக் கூறுகளிலும் வன்முறையற்ற நிலையை மனித சமுதாயம் ஏற்றுக்கொள்வதற்கு பல் சமய உரையாடல் உதவவேண்டும் என பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

தம்மை சந்திப்பதற்காக வருகை தந்திருந்த பௌத்த மத துறவிகள் மற்றும் பிரதிநிதிகளிடம் திருத்தந்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருப்பீடத்திற்கும் கிழக்காசிய நாடான மங்கோலியாவிற்கும் இடையே தூதரக உறவுகள் உருவாக்கப்பட்டதன் முப்பதாம் ஆண்டை சிறப்பிக்கும் வகையில் ஐந்து பேர் கொண்ட மங்கோலிய பௌத்தமதப் பிரதிநிதிகள் குழு வத்திக்கானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

அந்த விஜயத்தின் ஒரு அம்சமாக கடந்த சனிக்கிழமை காலை திருப்பீடத்தில் தன்னைச் சந்திக்க வந்திருந்த, அக்குழுவிடம் தன் எண்ணங்களை பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கத்தோலிக்கத் திருஅவையோடு இணைந்து அமைதியான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப ஆவல் கொண்டிருக்கும் அக்குழுவினரைப் பாராட்டினார்.

அமைதியே இக்காலத்தில் மனித சமுதாயத்தின் உள்ளார்ந்த ஏக்கமாக இருக்கின்றது, இதனால் அமைதி மற்றும் வன்முறையற்ற கலாச்சாரத்தை எல்லா நிலைகளிலும் உரையாடல் வழியாக ஊக்குவிப்பது உடனடித் தேவையாக உள்ளது.

சுற்றுச்சூழலுக்கு இழைக்கப்படும் பாதிப்புகள் உட்பட அதன் அனைத்து வடிவங்களும் புறக்கணிக்கப்பட எல்லா மக்களுக்கும் அழைப்புவிடுப்பதாக இந்த உரையாடல் அமையவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, சிலர் இன்னும் வன்முறையை நியாயப்படுத்த மதத்தைப் பயன்படுத்தும் வழிகளைத் தேடுகின்றனர் என்பதை கவலையோடு குறிப்பிட்டார்.

அதேவேளை கடந்த வாரம் பாப்பிறை ஆணைய பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றிய திருத்தந்தை கத்தோலிக்கத் திருஅவை, "ஒன்றிணைந்து" என்ற

இலக்கை நோக்கி பயணம் மேற்கொண்டுவரும் இவ்வேளையில் ஒன்றிணைந்த பயணம், ஒன்றிப்பு ஆகிய இரண்டும் திருஅவைக்கு முக்கியமானவை என தெரிவித்துள்ளார்.

நாம் அனைவரும் புனிதத்துவத்திற்கு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை நினைவுபடுத்திய திருத்தந்தை, ஆண்டவரின் சீடர்களாகிய நாம் அனைவரும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளவும் அவரைப் பின்பற்றவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதே இதற்குக் காரணம் என்றும் கூறியுள்ளார். ஒன்றிணைந்து பயணம் என்பதில் பக்குவமான மற்றும் நற்செய்திகூரும் வகையில் பலனளிப்பது குறித்து சிந்திக்கும்போது நம் வரையறைகள் குறித்தும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

நமக்கு எல்லாம் தெரியும் அல்லது, எல்லாவற்றிற்கும் எம்மிடம் பதில்கள் இருக்கின்றன என்ற தவறான நம்பிக்கை, ஒன்றிணைந்து பயணம் என்பதற்கு மிகவும் ஆபத்தானது, மற்றும், அது தூய ஆவியாரின் செயல்களுக்கு இடமளிக்காது என்றுரைத்த திருத்தந்தை, அத்தகைய மயக்கத்தில் வீழ்ந்துவிடாமல், நம் சிந்தனைகளில் திறந்தமனதுள்ளவர்களாய் இருப்பது முக்கியம் என்று எடுத்துரைத்துள்ளார்.

நிறைவு பெறும் வணக்க மாதம்

மாதாவின் வணக்க மாதமாக கத்தோலிக்க திருச்சபையினால் சிறப்பிக்கப்பட்டு பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுடன் முன்னெடுக்கப்பட்ட மே மாதம் நிறைவு பெறுகிறது.

திருச்சபையின் தாயாம் மரியன்னையின் சிறப்பு தினங்கள் பலவற்றை நாம் வருடாந்தம் கொண்டாடி மகிழ்கின்றோம். அந்த வகையில் மே மாதம் அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறப்பு மாதமாகும். ஆலயங்களில் பல்வேறு வழிபாடுகளும் மாதாவின் பக்தி சபையினரால் பல்வேறு நிகழ்வுகளும் நடைபெற்று சிறப்பு திருப்பலிகளும் இந்த மாதம் முழுவதிலும் நிறைவேற்றப்படும். அன்னை மரியாளின் திருச்சுரூபங்கள் ஆலயங்களிலிருந்து வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வீடுகளில் மாதாவின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்கின்ற மாதமாகவும் இந்த மாதம் திகழ்கின்றது.

அன்னை மரியாளின் ஆசீர்வாதத்திற்காக பல்வேறு திருத்தலங்களுக்கு யாத்திரை சென்று மரியாளை தரிசிக்க விரும்பும் விசுவாசிகளுக்கு வீடுகளுக்கே மரியன்னையின் திருச்சுரூபம் கொண்டு வரப்பட்டு சமூகத்தில் உள்ள மக்கள் ஒன்று கூடி வீடுகளில் செபித்து சிற்றுண்டிகளை பகிர்ந்துகொண்டு ஒற்றுமைப் படுவதற்கான சந்தர்ப்பமாகவும் இந்த மாதம் மாறிவிடுகிறது. ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளும் இந்த மாதாவின் திருச்சுரூப வீடு தரிசிப்பு நிகழ்வுகள் மே மாதம் நிறைவு பெற்றாலும் மக்கள் மனதில் அந்த விசுவாசமும் நம்பிக்கையும் ஆண்டு முழுவதும் தொடர்கின்றது. எங்கள் வீடுகளுக்கு வந்து எங்களையும் சமூகத்தில் உள்ள மக்களையும் ஆசீர்வதித்து எமக்காக இறைதந்தையிடம் பரிந்து பேசும் எங்கள் திருத்தாய் அன்னை மரியாளுக்கு கோடான கோடி தோஸ்திரங்கள்.

(ஸ)

நற்பண்புகளை நிலைநாட்டி உலகுக்கு கிறிஸ்துவின் அன்பைக் கொடுப்போம்

இவ்வுலகில் ஒவ்வொருவரும் மற்றவர்களைவிட அரிய, பெரிய சாதனைகளைப் படைக்க வேண்டும். 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றனர்.

'எவரெஸ்ட்' சிகரத்தை எட்டிப்பிடிக்கும் முயற்சியில் சிலர் தங்கள் உயிரையே இழந்துள்ளனர். ஆனால், இயேசு கிறிஸ்து 'எவரெஸ்ட்' சிகரத்தை அல்ல. விண்ணகத்தையே எட்டிப்பிடித்து விட்டார், "ஆண்டவராகிய இயேசு, மகிமையின் மன்னர். பாவத்தையும் சாவையும் தோற்கடித்த வெற்றி வீரர், வானதூதர் வியப்புற இன்று வானங்களின் உச்சிக்கு ஏறிச் சென்றார்.

இயேசு கிறிஸ்து விண்ணகம் சென்றது இவ்வுலக வாழ்வின் துன்ப துயரங்களிலிருந்து விடுதலை பெறுவதற்காக அல்ல. மாறாக, நமது தலைவரும் முதல்வருமாகிய அவர் சென்ற அதே இடத்திற்கு நாமும் ஒருநாள் செல்வோம் என்ற நம்பிக்கையை நம்மிடம் உருவாக்குவதற்கே.

கிறிஸ்து திருச்சபைக்குத் தலை; நாம் அவருடைய மறையுடலின் உறுப்புகள். தலையையும் உடலையும் பிரிக்க இயலாது. எனவே, கிறிஸ்துவின் விண்ணக மகிமையில் நாமும் ஒருநாள் பங்கு பெறுவோம் என்பது உறுதி. கிறிஸ்து விண்ணகம் சென்று, அங்கு நமக்காக ஓர் இடத்தை ஏற்பாடு செய்தபின், திரும்பி வந்து நம்மையும் அழைத்துக் கொண்டு போவார். அப்போது அவர் இருக்கும் இடத்திலேயே நாமும் இருப்போம் (யோவா 14:13).

கிறிஸ்து விண்ணகத்தில் கடவுளின் வலப்பக்கம் அமர்ந்துள்ளார். (மாற் 16:19), கடவுளின் மகிமையில் சரிநிகராக இருக்கிறார். அங்கு நமக்காகப் பரிந்து பேசுகிறார் (உரோ 8:34).

திருத்தூதர் யோவான் கூறுகிறார்: நாம் பாவம் செய்யக்கூடாது. அப்படியே நாம் பாவம் செய்தாலும் நமக்காகத் தந்தையிடம் கிறிஸ்து பரிந்து பேசுகிறார் (1 யோவா 2:1). கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுவதற்காகவே உயிர் வாழ்கிறார் என எபிரேயர் திருமுகம் கூறுகிறது (எபி 7:25)

கிறிஸ்து விண்ணகம் நுழைந்து நம் கடவுளின் முன் நிற்கிறார். எனவே உறுதியான நம்பிக்கையுடன் அவரை அணுகிச் செல்லவேண்டும். ஏனெனில் அவர் நம்பிக்கைக்கு உரியவர் (எபி 10:2223).

கிறிஸ்து விண்ணகம் சென்றபோது தமது கைகளை உயர்த்திச் சீடர்களுக்கு ஆசி வழங்கினார் என்று கடந்த ஞாயிறு நற்செய்தி கூறுகிறது (லூக் 24:50). அவருடைய ஆசி என்றும் நம்முடன் இருக்கின்றது. ஒவ்வொரு திருப்பலியிலும் அவர் தமது திருப்பணியாளர்கள் வழியாகத் தம் கைகளை உயர்த்தி ஆசி வழங்கிக் கொண்டே இருக்கிறார்.

கிறிஸ்து விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கு வந்தபோது அவர் தமது தந்தையைவிட்டுப் பிரியவில்லை. மண்ணகத்திலிருந்து விண்ணகம் சென்றபோது அவர் நம்மை விட்டுப் பிரியவில்லை: இவ்வுலகம் முடியும்வரை அவர் என்றும் நம்மோடு. இருக்கிறார் (மத் 28:20).

ஆசிரியர் ஒருவர் மாணவர்களிடம், "சூரியன் பூமியைச் சுற்றுகிறதா? அல்லது பூமி சூரியனைச் சுற்றுகிறதா? எது எதைச் சுற்றுகிறது?" என்று கேட்டதற்கு, ஒரு மாணவன், "தலை சுத்துகிறது" என்றான். நடுத்தர வயதுள்ள ஒரு பெண்மணி டாக்டரிடம், "டாக்டர்! காலையில் எழுந்தவுடனே அரை மணி நேரம் என் தலை சுத்துகிறது" என்றதற்கு, டாக்டர் அவரிடம், "அப்ப, அரை மணி நேரம் பிந்தி எழுந்திருங்க" என்றார்.

நாம் காலையில் எவ்வளவு நேரம் கழித்து எழுந்தாலும் நமது பிரச்சினைகள் நம்மோடு எழுகின்றன; தலை சுற்றுகிறது. இதற்குத் தீர்வு கிடையாதா? கிறிஸ்து கூறுகிறார்: "உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு. எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன்" (யோவா 16:33). எனவே. மனத் துணிவு பெறுவோம். கிறிஸ்துவுடன் இணைந்து நம்மால் சமாளிக்கமுடியாத பிரச்சினைகள் எதுவுமில்லை.

விண்ணகம் சென்ற இயேசு மீண்டும் வருவார் (திப 1:11). நமக்கு வானகமே தாய்நாடு: அங்கிருந்து மீட்பர் வருவார் எனக் காத்திருக்கிறோம் (பிலி 3:20). தொடக்கக் கிறிஸ்தவர்களின் ஏக்கம்: ''மாரனாத்தா', ஆண்டவரே வருக (1 கொரி 16:22), விவிலியத்தின் இறுதி வேண்டுகோள்: "ஆண்டவராகிய இயேசுவே வாரும் (திவெ 22:20). கிறிஸ்துவின் வருகையை நாம் மகிழ்ச்சியோடு எதிர்பார்க்கிறோம். பேதுரு கூறுகிறார்: அவர் காலம் தாழ்த்தவில்லை; பொறுமையோடு இருக்கிறார். யாரும் அழிந்து போகாமல், எல்லாரும் மனம் மாற விரும்புகிறார் (2 பேது 3:69).

கிறிஸ்து எப்போது வருவார் என்று வானத்தை அண்ணாந்து பார்க்காமல், அவர் நமக்கு விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து ஆற்றுவது நமது கடமை. அவர் நமக்கு விட்டுச் சென்ற பணிகள்: படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்: எல்லா இனத்தாரையும் என் சீடராக்குங்கள்: மண்ணுலகின் இறுதி எல்லைவரை என் சாட்சிகளாய் இருங்கள்; பேய்களை விரட்டுங்கள்; நோய்களைக் குணமாக்குங்கள் (மாற் 16:1518).

இவ்வாறு செய்ய நம்மால் இயலுமா? என்ற கேள்வி எழுகிறது. நம்மால் நிச்சயமாகச் செய்ய முடியும். ஏனெனில் சீடர்கள் நற்செய்தியை அறிவித்தபோது, அவர்களுடன் கிறிஸ்து இருந்து செயல்பட்டார்; அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார் (மாற் 16:1920). எனவே, நாம் சிறுமந்தையாக இருந்தாலும், கிறிஸ்துவின் உடன் இருப்பிலும். வல்லமையிலும் நம்பிக்கை வைப்போம். நற்செய்தி விழுமியங்களான அன்பு, நீதி, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நற்பண்புகளை நிலைநாட்டி உலகுக்குக் கிறிஸ்துவின் உருவைக் கொடுப்போம்.

அருட்பணி
வை.இருதயராஜ்....

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 மே 31
செவ்வாய்க்கிழமை

மன்னார் மாவட்டத்தில்

25 ஆயிரம் குடும்பங்களுக்கு தமிழ்நாட்டு உணவு பொருட்கள்

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு தமிழ் நாட்டு மக்கள் வழங்கிய அத்தியாவசிய உணவு பொருட்களை வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக பாதிக்கப் பட்ட மக்களுக்கு தமிழ்நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவு பொருட் களை அன்பளிப்பாக வழங்கியுள்ள நிலையில் குறித்த உலர் உணவு பொருட்கள் அனைத்து மாவட்ட மக் களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வரு கிறது.

இந்த நிலையில் மன்னார் மாவட் டத்தில் 25,000 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நேற்று திங்கட் கிழமை (30) காலை மன்னார் பிரதேச செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெலிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

குறித்த உணவுப்பொருட்கள் இந்திய உயர்ஸ்தானிகர் தலைமை யில் உத்தியோகபூர்வமாக தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு வழங்கி வைக்க நடவடிக்கைகள் மேற்கொள் ளப் பட்டுள்ளன. முதற்கட்டமாக 6500 குடும்பங்களுக்கு வழங்குவதற் காக 65,000 கிலோ உணவுப் பொருட் கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு, மடு, நானாட் டான் மற்றும் முசலி பிரதேச செயல கங்களுக்கு, உணவுப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டு பயனாளர்க ளுக்கு வழங்கப்பட உள்ளது.

தீப்பிடித்து எரிந்த முச்சக்கரவண்டியால் பதற்றம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா புகையி ரத நிலைய வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த முச்சக்கரவண்டி ஒன்று நேற்று (30) திடீர் என தீப்பிடித்து எரிந் துள்ளது.

இதனையடுத்து அங் கிருந்தவர்களால் தீ உட னடியாக அணைக்கப் பட்ட நிலையில் பாரிய அசம்பாவிதம் தவிர்க் கப்பட்டிருந்தது.

குறித்த தீ விபத்து கார ணமாக முச்சக்கர வண்டி பகுதியள வில் சேதமடைந்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

நல்லூர் மகோற்சவம் ஆகஸ்ட் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வரு டாந்த பெருவிழா எதிர்வரும் ஆகஸ்ட் 2ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இந் நிலையில்,

நல்லூர் கந்தன் பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, ஆலயத் திற்கு வரும் பக்தர்களுக்கான அத்தியா வசிய தேவைகளை பூர்த்திசெய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக் குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ் மாநகரசபையினருக்கு ஆலய சம்பி ரதாய முறைப்படி (30) பெருவிழா நாட்காட்டி அடங்கிய காளாஞ்சி ஆல யத்தினரால் கையளிக்கப்பட்டது.

இந்த வைபவத்தின் போது பாரம் பரிய முறைப்படி யாழ் மாநகரசபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப் பெற்றிருந்தது.

பதவி உயர்வு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கத்தில் இணைப் பேராசிரியர் ஒருவர் திறமை அடிப்ப டையில் பேராசிரி யராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

விஞ்ஞான பீடத்தின் தாவரவியற் துறையைச் சேர்ந்த இணைப் பேரா சிரியர் பி. செவ்வேள் தாவரவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்படுவ தற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்பு தல் வழங்கியுள்ளது. பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் (28), சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரி யர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப் படையில் பேராசிரியர் பதவிக்கு விண் ணப்பித்த இணைப் பேராசியர் பி. செவ்வேளின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத் தில் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றின் படி, தாவரவியற் துறையைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் பி. செவ்வேள் தாவரவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பதக்கங்களை வென்று உலக கிண்ண போட்டிக்கு தெரிவாகிய வடக்கு வீராங்கனைகள்

ஓமந்தை விஷேட நிருபர்

இந்தியாவில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண மிக்ஸ் பொக்சிங் போட்டிக்கான தெரிவுப்போட்டி யில் வவுனியா, கிளிநொச்சி [கிளி/ மத்திய கல்லூரி மாணவி] மற்றும் முல்லைத்தீவை சேர்ந்த வீர வீராங்க னைகள் உலகக் கிண்ண போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

சிறிலங்கா மிக்ஸ் பொக்சிங் அமைப்பின் ஊடாக இந்தியாவில் இடம்பெற்ற உலக கிண்ண மிக்ஸ் பொக்சிங் தெரிவுப் போட்டியில் வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவை சேர்ந்த 7 வீர வீராங் கனைகள் பதக்கங்களை பெற்று பெருமை சேர்த்துள்ளார்கள்.

இம் மாதம் 27ஆம் திகதி இந்தியா வில் ஆரம்பமான போட்டிகள் 30 ஆம் திகதி நேற்றுடன் முடிவுற்றது. குறித்த போட்டியில் இலங்கை, இந்தியா, இத்தாலி நாடுகளைச் சேர்ந்த வீர வீராங்க னைகள் பங்குபற்றி யிருந்தார்கள்.

இ வ ர் க ள் இப்போட்டியில் கி க் பொ க் சிங் போட்டியில் 4 த ங் க ப் ப த க் க ங் க ளும், 1 வெள்ளிப் பதக்கமும், மல் யுத்த போட்டியில் 2 வெள்ளி பதக் கங்களும் பெற்று மொத்தமாக 7 பதக் கங்களை பெற்று வெற்றியை தம தாக்கி கொண்டுள் ளனர்.

குறித்த இப்போட்டியில் தங்க பதக்கத்தினை பெற்ற வீர, வீராங் கனைகள் உலக மிக்ஸ் பொக்சிங் சங்கத்தினூடாக 3 மாத பயிற்சியை இந்தியாவில் இருந்து பெற்று எதிர் வரும் ஓகஸ்ட் மாதம் இடம்பெற வுள்ள உலக கிண்ண போட்டியி லும் பங்கேற்கவுள்ளனர் .

ஆசிய மிக்ஸ் பொக்சிங் சங்கத் தின் தலைவரும் பயிற்றுனருமா கிய செல்வரத்தினம் நந்தகுமார் தலைமையில் குறித்த மாணவர்கள் போட்டிக்கு சென்று பதக்கங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் வீட்டில் பெற்றோல் விற்பனை செய்த நபர் கைது

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பூவரசன்குளம் பகுதி யில் சட்டவிரோதமான முறையில் வீட்டில் வைத்து பெற்றோல் விற்பனை செய்த நபர் ஒருவரை பொலிசார் நேற்று கைது செய்துள்ள தாக தெரிவித்துள்ளனர்.

வவுனியா பூவரசன்குளம் பொலிஸ் பிரிவில் சட்ட விரோத மான முறையில் வீட்டில் வைத்து பெற்றோல் விற்பனை செய்து வரு வதாக கிடைத்த முறைப்பாட்டை யடுத்து பூவரசங்குளம் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது சந்தேக நபர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார். சட்டவிரோதமாக பெற்றோல் விற்பனை செய்த குற் றச்சாட்டில் கைது செய்த பொலிசார் அவரிடமிருந்து பெற்றோல் என்ப னவற்றையும் கைப்பற்றப்பட்டுள்ள தாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று நீதவான் நீதிமன் றத்தில் முற்படுத்த நடவடிக்கை கள் இடம்பெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

யாழில் புகையிரத விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் அரியாலை பூம்பு கார் பகுதியில் இடம்பெற்ற புகை யிரத விபத்தில் ஒருவர் உயிரிழந் துள்ளார். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த குளி ரூட்டி புகையிரதத்துடன் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.

அதேவேளை குறித்த பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரத கடவை உள்ளதாகவும், அதனால் அப்பகு தியில் அடிக்கடி புகையிரத விபத் துக்கள் இடம்பெறுவதாகவும், தமக்கு பாதுகாப்பான புகையிரத கடவையை அமைத்து தர நடவ டிக்கை எடுக்க வேண்டும் என ஊர வர்கள் போராட்டத்திலும் ஈடுபட்ட னர்.

யாழில் நடேசன் நினைவு நிகழ்வு

யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட் டில் ஊடகவியலாளர் நாட்டுப்பற்றா ளர் ஐயாத்துரை நடேசனின் 18வது நினைவேந்தலும் நூல் வெளியீடும் யாழ். கலாசார மண்டபத்தில் நடை பெற்றது. யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன், தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேச னின் உருவப்படத்திற்கு வடமாகாண சபையின்

அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞா னமும், யாழ் மாநகர முதல்வர் மணி வண்ணனும் மலர்மாலை அணிவித் தனர். ஈகைச்சுடரை ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் உறவினரும் சட்டத்தரணியுமான க.சுகாஷ் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் நடேசன் தொடர்பில் அவருடன் ஊடகப்பணியாற்றிய சக ஊடகவியலாளர்கள், செயற்பாட்டா ளர்களென பலரது நினைவுகூரலுடன் வெளிவந்துள்ள நூல் அறிமுகமும் வெளியீடும் நடைபெற்றது.

நூலை யாழ் ஊடக அமையத்தின் செயலாளர் நிதர்ஷன், ஊடகவியலா ளர் ஐயாத்துரை நடேசனின் குடும் பத்தினருக்கு சமர்ப்பணம் செய்தார். அதேவேளை "நடேசனின் ஊட கத்துறை பயணம்" தொடர்பிலான நினைவுரைகளுடன் ஞாபகார்த்த நினைவுப் பேருரையினை யாழ்.பல் கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதன் ஆற் றினார். நூல் அறிமுக உரையை மூத்த ஊடகவியலாளரும் யாழ். ஊடக அமையத்தின் ஸ்தாகருமான இ.தயா பரன் நிகழ்த்த நன்றியுரையை மூத்த ஊடகவியலாளரும் யாழ்.ஊடக அமையத்தின் இணைப்பாளருமான கு. செல்வகுமார் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் இறுதியாக ஊடக வியலாளர்களது தயாரிப்பில் உருவாக் கப்பட்ட ஆவணப்பட காட்சிப்படுத் தலும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தின் கரவெட்டியில் பிறந்த மூத்த ஊடகவியலாளர் ஐயாத் துரை நடேசன் 2005ம் ஆண்டின் மே 31ம் திகதி மட்டக்களப்பில் வைத்து சுட்டுப் படுகொலை செய்யப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் இந்து, பௌத்த கலாசார பேரவையின் இலவச வகுப்புக்கள்

கோப்பாய் குறூப் நிருபர்

வட மாகாணத்தில் இந்து, பௌத்த கலாசார பேரவையால் நடாத்தப்படும் இரண்டாம் மொழி கற்கை நெறியான சிங்கள மொழியை 2021 - 2022 வரை கல்வி கற்று 600 மணித்தியாலங்கள் (HNDS) பூர்த்தி செய்த மாணவர்களுக் கான பரீட்சை யூன் மாதம் 4, 5 ஆகிய திகதிகளில் வடக்கு மாகாணம் முழுவ தும் அதற்குரிய பரீட்சை நிலையங்க ளில் நடைபெறும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

இதில் வெளிவாரியாக சிங்கள மொழியை கற்ற மாணவர்களும் இந்த பரீட்சையில் பங்குபற்றி அரச அங்கீகாரமுடைய HNDS சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியும். இந்து, பௌத்த கலாசார பேரவையால் சிங் களம் மற்றும் ஆங்கில மொழிக்கான வகுப்புக்கள் அரச பாடசாலைகளில் 120 மணித்தியாலங்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இலவச மாக கற்பிக்கப்படும்.

கிழக்கின் குரல்

மீனவப் படகுகள் எரிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை சம்பூர் பகுதியில் உள்ள கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மீனவர்களின் படகுகள் இனந்தெரியாத விசமிகளால் திங்கட்கிழமை (30) எரியூட்டப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பம் தனிப்பட்ட குரோதத்தால் இடம்பெற்றதா? அல்லது வேறேதும் காரணங்களால் நிகழ்ந்ததா? என்பது தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு படகுகளும் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சம்பவ இடத்திற்கு சம்பூர் பொலிஸார் வருகை தந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மீன் குஞ்சுகள் வழங்கி வைப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் அதிக ளவு டெங்கு நோய் இனங் காணப் பட்ட பகுதிகளுக்கு, "உதவும் கரங்கள்" அமைப்பின் ஊடாக பெறப்பட்ட குறா மீன்கள் பொதுச் சுகாதார பரிசோதகரின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர், உதவும் கரங்கள் அமைப்பு உறுப்பினர்கள், மாநகர சபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக டெங்கு கட்டுப்பாட்டு ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

மாகாண சபை நிதி செலவினங்களை உடன் குறைக்குமாறு அறிவுறுத்தல்

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்

(ஒலுவில் விசேட நிருபர்)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மற்றும் சமூக நெருக்கடி நிலைமை இயல்பு நிலைக்கு திரும்பும் வரை, கிழக்கு மாகாண சபையின் நிதிச் செலவினங்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறைக்குமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அறிவுறுத்தியுள்ளார். மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாண மக்களும் அதே பிரச்சினைக் குரிய நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறான நிலையில், மாகாண சபைக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்களும் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் தமது நிதி ஒதுக்கீட்டை வழங்குவதுடன், அதனை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என ஆளுநர் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் சிறப்பு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களை அச்சிடுதல், அத்தியாவசியமற்ற உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகள், புதிய பொருட்களை கொள்வனவு செய்தல், முன்னர் திட்டமிட்டு மதிப்பிடப்பட்ட போதிலும், இதுவரை ஆரம்பிக்கப்படாத அத்தியாவசிய மற்ற திட்டங்கள் மற்றும் கட்டுமானப் பணிகளை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துமாறு ஆளுநர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கு நீண்ட காலம் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மௌலானாவுக்கான கௌரவம், அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஐ.சி.ஆர்.சி.வதிவிடப் பிரதிநிதி இசட் எம்.ஜஃபர், சட்டத்தரணி றைசுல் ஹாதி, கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வை.கே.றஹ்மான் ஆகியோரும் கௌரவம் பெற்றனர். (படம்: பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

கொவிட்டால் உயிரிழந்த தமிழரசு கட்சி உறுப்பினர்களை நினைவுகூரும் நிகழ்வு

(அன்புவழிபுரம் தினகரன், ரொட்ட வெவ குறூப் நிருபர்கள்)

கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்த திருகோணமலை மாவட்ட இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர்களை நினைவேந்தும் நிகழ்வு, திருகோணமலை மாவட்ட தமிழரசு கட்சியால் ஞாயிற்றுக்கிழமை (29) உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழரசு கட்சியில் இருந்து மக்களுக்காக பாடுபட்ட கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர்.க.துரைரெட்ணசிங்கம் அவர்களையும் இதுபோல தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் திருகோணமலை நகர சபை உறுப்பினருமான கோ.சத்தியசீலராஜா, தமிழரசு கட்சியின் குச்சவெளி திரியாய் வட்டார கிளையின் முன்னாள் தலைவர் பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் கிண்ணியா பைசல் நகர் வட்டார கிளை முன்னாள் தலைவர் மு. க. மஹ்ரூப், முன்னாள் வில்லூன்றி வட்டாரக்கிளை தலைவர் கனக மகேந்திரா ஆகியோரை நினைவு கோரி நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பொதுச் செயலாளர் டாக்டர்சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், இரா.சாணக்கியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறுபோக வேளாண்மையை ஆரம்பித்துவைத்த பிரதேச செயலாளர்

கிண்ணியா தினகரன் நிருபர்

கிண்ணியா பிரதேசத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்படும் பிரதேசமான பக்கிரான் வெட்டைக்கு ஞாயிற்றுக்கிழமை (29) கள விஜயம் மேற்கொண்ட கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி சிறுபோக வேளாண்மையை ஆரம்பித்து வைத்தார்.

கந்தளாய் குளத்தை நம்பி கிண்ணியாவில் சிறுபோக வேளாண்மை செய்யும் இடங்களாக சூரங்கல்,நாவட்சோலை, ஆயிலியடி, கிணத்தடிப் பள்ளம், பொத்தானைவெளி, கரடிவெட்டை, கூழடிவெட்டை, வான்எல, அளவாங்கர்கொல்லை, 10 ஏக்கர் திடல் ஆகியனவும் காணப்படுகின்றன. சிறுபோக வேளாண்மை மேற்கொள்ளப்படும் பக்கிரான்வெட்டைக்கு கள விஜயம் மேற்கொண்ட பிரதேச செயலாளர் தானும் ஒரு விவசாயியாக மாறி வயலில் விதை நெல்லை விதைத்ததுடன், அங்குள்ள விவசாயிகளின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

நாட்டின் ஏனைய விவசாயிகள் போன்று கிண்ணியா விவசாயிகளும் கடந்தகாலங்களில் இரசாயன உரம் இன்மையால் அதிக நஷ்டத்தை எதிர் கொண்டிருந்தனர்.

இந்நிலைமை இம்முறையும் ஏற்படக்கூடாது என கருதியே கிண்ணியா பிரதேச செயலாளர் நேரடியாக களத்திற்கு சென்று விவசாயிகளின் பிரச்சினையை ஆராய்ந்ததாக தெரிவித்தார்.

பொது இடங்களில் டெங்கு பரிசோதனை

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய பிரதேசத்திலுள்ள ஆலயங்கள், கட்டுமானப் பணிகள் இடம்பெறும் அரச, அரசசார்பற்ற, நிறுவனங்கள் மற்றும் தனியார் வீடுகள் ஆகியவற்றில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை பரிசோதிக்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ். இராஜேந்திரன் வழிகாட்டலில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஓந்தாட்சிமடம், மகிழூர், குருமண்வெளி, எருவில், பட்டிருப்பு, களுவாஞ்சிகுடி ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் தங்களது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்குமாறும், டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றாடலை வைத்திருப்போருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீரில் மூழ்கி மாணவன் மரணம்

(மட்டக்களப்புகுறூப்நிருபர்)

நீராடச் சென்ற 16 வயது மாணவன் ஒருவன் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி மீராவோடை புளியடித்துறை ஆற்றில் வைத்தே இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்றுள்ளது.

மீராவோடை அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்று வரும் எம்.எச்.அர்ஹம் எனும் மாணவன் நண்பர்களோடு சேர்ந்து நீராடும் போதே நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

நீரில் மூழ்கி மரணமடைந்த மாணவனை கல்குடா சுழியோடிகள் நீண்ட நேரமாக தேடி மீட்டெடுத்தனர்.

மாணவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 13 மாற்றுத் திறனாளிகளுக்குரிய உபகரணங்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. இதில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாறக், உதவி பிரதேச செயலாளர், சமூக சேவை உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (படம்: தோப்பூர் தினகரன் நிருபர்)

மோட்டார் சைக்கிள் தீக்கிரை

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், இனந்தெரியாதோரால் தீக்கிரையான சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் சனிக்கிழமை (28) இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குடும்பஸ்தரான (ஏ.சி. பரீட் வயது (38) ஒருவருக்கு சொந்தமான பல்சர் ரக மோட்டார் சைக்கிளை வீட்டு முற்றத்தில் வழமை போன்று நிறுத்தி விட்டு இரவில் தூங்கிய போது தீப்பற்றி எரியும் வாசனை ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து இரவு 12.30 மணியளவில் வெளியில் வந்து பார்த்தவுடன், மோட்டார் சைக்கிள் எரிந்துள்ளது.

மோட்டார் சைக்கிளுடன் துணி உலரவைக்கும் இயந்திரம், சிறிய ரக துவிச்சக்கர வண்டியுடனான உடுப்பும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

உயிரூட்டிய பாடசாலைக்கு உரமூட்டும் வேலை திட்டம்

கல்முனை அஸ் -ஸுஹராவுக்கு உபகரணங்கள் கையளிப்பு

(சாய்ந்தமருது விசேட நிருபர்)

உயிரூட்டிய பாடசாலைக்கு உரமூட்டும் வேலை திட்டத்தின் கீழ் கல்முனை அஸ் ஸுஹரா வித்தியாலயத்துக்கு முதலாம் கட்டமாக ஒரு தொகுதி பாடசாலை உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

முதலாம் கட்டமாக ஒரு தொகுதி புதிய கதிரைகள் மற்றும் மேசைகள் திருத்தியமைக்கப்பட்ட மாணவர்களுக்கான கதிரைகள், மேசைகள், ஆசிரியர்களுக்கான கதிரைகள், வைட் போர்ட் (White Board) மற்றும் தளபாடங்கள் என்பன வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ். ஆர்.மஜீதியாவிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு பாடசாலை பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்றது.

இதன்போது பாடசாலை அபிவிருத்தி குழுவினரும் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்திற்கு பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் பங்களிப்பில் சுமார் 7 இலட்சம் ரூபாய் செலவில் குறித்த வேலைத்திட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மூக்குக்கண்ணாடி விநியோகம்

தம்பலகாமம் குறூப் நிருபர்

கிண்ணியாவில் கண் பார்வை குறைபாடுடையவர்களுக்கான மூக்குக்கண்ணாடி இலவசமாக வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (29) கிண்ணியா பிரதேச செயலக மண்டபத்தில் காலை இடம்பெற்றது.

தேசிய விடுதலை மக்கள் முன்னணி கட்சி இதனை ஏற்பாடு செய்து இருந்தது.

இந் நிகழ்வின் போது மூக்கு கண்ணாடி சுமார் 150 பேருக்கு வழங்கப்பட்டன. மூக்கு கண்ணாடி வழங்கும் வைபவத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பெர்னான்டோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கழிவுகள் கொட்டப்படுவதால் சுகாதார சீர்கேடு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் கொல்லனாற்றங்கரை, கோட்டை ஆற்று ஆற்றங்கரை மற்றும் பொழுதுபோக்கு பூங்கா மற்றும் பாடசாலை மைதானத்தை அண்மித்த வீதி ஓரங்கள், ஆற்றங்கரைகளில் கழிவுகள் தொடர்ந்தும் கொட்டப்படுவதால் இவ்விடங்களில் நுளம்புகள் பெருகி வரும் நிலையில், பெரும் சுகாதார சீர்கேடுகளுக்கு உள்ளாகியுள்ளதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்விடங்கள் ஊடாக பொது மக்கள் பல்வேறு இடங்களுக்கும் போக்குவரத்து செய்து வருகின்றனர். இந்நிலையில் இவ்விடங்களில் கொட்டப்படும் திண்மக் கழிவுகள் மற்றும் மாமிச கழிவுகளை நாய்கள், காகங்கள் என்பன உண்டுவருவதால் அதில் இருந்து துர்வாடைகளும் வீசுகின்றன.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி இவ்விடங்களை தூய்மைபேணுமாறும் பொது மக்கள் வேண்டி உள்ளனர்.

காத்தான்குடியில் மண்ணெண்ணெய்க்காக காத்திருக்கும் பொதுமக்கள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி வடக்கு எல்லையிலுள்ள எரி பொருள் நிரப்பும் நிலையத்தில் மண்ணெண்ணையை பெற்றுக் கொள்வதற்காக பொது மக்கள் பல மணி நேரம் நீண்ட வரிசையில் சனிக்கிழமை (28) காத்து நின்றனர்.

பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் என பலரும் மண்ணெண்ணையை பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்து நின்றதை காணமுடிந்தது.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்ளமுடியாத நிலைமையில், மண்ணெண்ணை அடுப்பை பயன்படுத்தி சமையல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் மண்ணெண்ணையை பெற மக்கள் பெரிதும் முயற்சிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடும் வெயிலுக்கு மத்தியிலும் மண்ணெண்ணையை பெற்றுக் கொள்வதற்காக பொது மக்கள் பல மணி நேரம் நீண்ட வரிசையில் காத்து நின்றதை காணமுடிந்தது.

நகர்வலம்

வடமத்திய, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி

ரூ. 36,855 மில்லியன் செலவில் யான் ஓயா நீர்ப்பாசன திட்டம்

10,000 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பாசன வசதிகளை வழங்க திட்டம்

திறப்பனை தினகரன் நிருபர்

வடம த்திய மாகாண மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மை யில் கட்டி முடிக்கப்பட்ட மிகப் பெரிய நீர்த்தேக்கம் யான் ஓயா நீர்த் தேக்கமாகும். 36,855 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட் டுள்ள இந்நீர்த்தேக்கம் நாட்டின் மூன்றாவது பெரிய நீர்த்தேக்கமாக கருதப்படுகின்றது. இதன் நீர் கொள் ளளவு 145,000 ஏக்கர் அடி என மதிப் பிடப்பட்டுள்ளது. சீன நிறுவனத்தை யும் நீர்ப்பாசனத் திணைக்களமும் இணைத்து இத்திட்டத்தை நிறை வேற்றியுள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள ரிதிகல மலைத்தொடரில் இருந்து ஆரம் பித்து ரிதிகல மற்றும் ஹுருலுவெவ, கலென்பிந்துனு வெவ, மொரகேவ, ஹார்மலேபத்தனை, கபுகொல் லேவ, கோமரன்கடவல மற்றும் ஏனைய பிரதேசங்கள் ஊடாக பாய்கி றது. வரண்ட காலங்களில் யான் ஓயா ஒரு மெல்லிய மணல் ஓடையாக இருந்தாலும், மழைக்காலங்களில் நொறுங்கும் பெரிய நீர் நிலையாக கடலில் கலக்கிறது.

அதன்படி யான் ஓயா நீர்த்தேக்கம் யான் ஓயாவைக் கடந்து, கெபித் திகொல்லாவ வாஹல்கடயில் அணைக்கட்டி வடமத்திய, கிழக்கு

மாகாணம் மற்றும் வன்னி மாவட்ட விவசாயிகளுக்கு நீர் வழங்கும் நோக்கத்தில் இது நிர்மாணிக்கப்பட் டுள்ளது.

யான் ஓயா நீர்த்தேக்கமானது சுமார் 29 மீட்டர் ஆழத்தில் உள்ளது. இங்கு தண்ணீரை வெளியேற்ற ஆறு பெரிய மதகுகள் உள்ளன. இந்த நீர்த் தேக்கம் 34 கிமீ நீளமுள்ள வலது மற்றும் இடது கால்வாய் அமைப் பைக் கொண்டுள்ளது. இதில் 2.5 கி.மீ நீளமுள்ள பிரதான அணைக் கட்டு மற்றும் சுமார் 4 கி.மீ நீளம் கொண்ட நான்கு வழித்தடங்களும் உள்ளன. சிவலாகுளம், இஸ்சன் வெவ, கோமரன்கட, கும்புக்வெவ மற்றும் ஜயந்திவெவ போன்ற பிரதே சங்கள் இந்த நீர்த்தேக்கத்தினால் பய னடையும் பிரதேசங்களாகும். மொத் தத்தில் சுமார் 14,000 குடும்பங்கள் இந்த பாரிய நீர்த்தேக்கத் திட்டத்தி னால் பயனடைபவர்கள் என மதிப் பிடப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் ஊடாக சுமார் ஏறக்குறைய 10,000 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பா சன வசதியை வழங்கும் திட்டமாக இது கருதப்பட்டிருக்கின்றது.

தோட்டங்களுக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும் நன்னீர் மீன்பி டியை ஊக்குவிக்கவும் நீர் மின் உற் பத்தியை மேற்கொள்ளவும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் புதிய திட்டங்களை உருவாக்கவும் இங்கு திட்டமிடப்பட்டுள்ளது. அநுராதபு ரம் அரசாங்க அதிபர் ஜனக ஜயசுந்தர தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிக்கு விஜயம் செய்து குறிப் பிட்ட செயற்திட்டத்தை நேரில் அவ தானித்துள்ளனர். மீள்குடியேற்றம், பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல் தொடர்பாக அரசாங்க அதிபர் திட்ட அதிகாரிகளுடன் இங்கு கலந்துரை யாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தங்காலை பிரதேசத்தில் டெங்கு தீவிரம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

தங்காலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோய் வேகமாக பரவி வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் அறி வித்துள்ளது. தங்காலை முஸ்லிம் வீதி, தங்காலை பொலிஸ் நிலையம், சீனிமோதர மற்றும் பொலம்மா ருவை ஆகிய பிரதேசங்களிலேயே இவ்வாறு டெங்குநோய் வேகமாக பரவி வருகிறது. இதனால் கடந்த சில தினங்களில் மேற்படி பிரதேசங் களிலிருந்து 25 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டுள் ளனர். பிரதேசமெங்கும் பொலிஸ், கடற்படை மற்றும் சுகாதார காரி யாலயம் ஆகியன இணைந்து பிர தேசத்தை சுத்தம் செய்வற்கான நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரு கைத்துப்பாக்கிகள் பொலிஸாரால் மீட்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட போ 12 ஸ்டீவன் வகையிலான இரண்டு கைத்துப்பாக்கிகள் மற்றும் இரண்டு தோட்டாக்களையும் வீட்டில் மறைத்துவைத்திருந்த நிலையில் பொலிசாருக்கு கிடைக் கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய புதிய புஞ்சிக்குளம் பகுதியில் கைப்பற்றியுள்ளதாக திறப்பனை பொலிசார் தெரிவித்தனர்.

திறப்பனை அழுத்புஞ்சிக்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளவராவர்.

சந்தேக நபர் விவசாயம் செய்துள் ளதுடன் விவசாய பண்ணையினை பாதுகாக்கும் போர்வையில் வனவி லங்குகளை வேட்டையாடுவதற்கு குறித்த துப்பாக்கிகளை பயன்ப டுத்தி இருக்கலாம் என சந்தேகிப்ப தாக திறப்பனை பொலிசார் தெரிவித் தனர்.

பாரி மத்ரஸாவில் நேர்முக பரீட்சை

(வெலிகம தினகரன் நிருபர்)

தென் இலங்கையின் பழைமை வாய்ந்த முதல் அறபுக்கல்லூரியான பாரி அரபுக் கல்லூரிக்கு ஹிப்ழ் பிரிவு (அல் குர்ஆன் மனனம்) மற்றும் ஷரீஆ பிரிவுகளுக்கு புது மாணவர் கள் சேர்த்துக்கொள்வதற்கான நேர்மு கப் பரீட்சை எதிர்வரும் 4ம், 5ம் திக திகளில் (சனி,ஞாயிறு) காலை 8.30 மணிமுதல் கல்லூரியில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

ஹிப்ழ் பிரிவில் சேர விரும்புவோர் அல்குர்ஆனை திறமையாக ஓதக்கூ டியவர்களாகவும், 6ம் தரம் சித்திய டைந்து 13 வயதைத் தாண்டாதவரா கவும் இருத்தல் அவசியம். ஷரீஆ பிரிவுக்கு சேரவிரும்புவோர் அல் குர்ஆனை திறமையாக ஓதக்கூடிய வராகவும் 8ம் தரம் சித்தியடைந்தவ ராகவும் மும்மொழிகளில் ஏதாவது ஒரு மொழியில் தேர்ச்சி உள்ளவரா கவும் இருத்தல் வேண்டும். மேற்கு றிப்பிட்ட தகைமை உடையவர்கள் தம் பெற்றோருடன் குறிப்பிட்ட திக தியில் மத்ரஸாவிற்கு வருகை தந்து நேர்முக பரீட்சைக்கு தோற்றுமாறு கல்லூரி அதிபர் அஷ்ஷேக் அல் ஹாபிழ் அப்துர்ரஹ்மான் (மழாஹிரி) கேட்டுக்கொண்டுள்ளார்.

புதிய பிரதமர் ரணில் மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுவார்

ஐக்கிய காங்கிரஸ் கட்சி

புதிய பிரதமர் ரணில் விக்ரமசிங்க பாராளு மன்றத்தில் தனி ஆளாக இருந்த போதும் பிரதமர் பதவியை பெற்றதிலிருந் தும் ஏனைய பாராளுமன்ற உ று ப் பி னர் க ளி ன து ம் பொது மக்கள் பலரினதும் நம்பிக்கையை பெற்று வருவது மகிழ்ச்சி தருகி றது என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளதா வது,

நாட்டில் இன்னமும் பொருட் களுக்கான தட்டுப்பாடு குறை யவில்லை. கேஸ், பெற்றோல், டீசல் என பல விடயங்கள் இன் னமும் சுமுகமான விநியோகத்துக்கு வரவில்லை.

அத்துடன் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பலரும் பதுக்கி வைத்து அசாதா ரண தட்டுப்பாட்டை ஏற் படுத்தி வருவதை காண முடிகிறது.

இந்த நிலையில் பிரதமர் பதவியை துணிச்சலுடன் பெற்றுக்கொண்ட ரணில் விக்ரமசிங்க கொஞ்சம் கொஞ்சமாக நாட்டை நல்ல நிலைக்கு கொண்டுவர முயற் சிப்பது வரவேற்கத்தக்கது.

பாராளுமன்றத்தில் தனி ஆளாக இருந்த போதும் அவர் அதிர்ஷ் டசாலி என்பதில் சந்தேகமில்லை. அதேபோல் மிக இலகுவாக, பிரச் சினைகள் எதுவும் இன்றி மீண்டும் புதிய அமைச்சரவையை உருவாக் கியமை மூலம் பிரதமர் ரணிலின் அனுபவமும் முதிர்ச்சியும் தெரிகி றது.

கொழும்பு புகாரி தைக்காவின் 116வது புகாரி கந்தூரி தமாம்

ருஸைக் பாரூக்

கொழும்பு மருதானை அல் மஸ் ஜிதுல் புகாரி தைக்காவின் 116 வது வருடாந்த புகாரி கந்தூரி தமாம் வைபவம் நேற்று முன்தினம் (29) மஸ்ஜிதுல் புகாரி தைக்காவில் அஷ்ஷெய்க் அல்லாமா அப்சழுல் உலமா தைக்கா அஹ்மத் நாஸீர் ஆலிம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இவ்நிகழ்வில் மஸ்ஜிதுல் புகாரி தைக்கா நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் ஷாஹுல் ஹமீட், அப்ச ழுல் உலமா தைக்கா அஹ்மத் நாசீர் ஆலிமை பொன்னாடை போர்த்தி வரவேற்றார்.

நாட்டின் தற்போதைய பொருளா தார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ் திரத்தன்மைக்காக அப்சழுல் உலமா

விஷேட துஆ பிரார்த்தனை நடத்தி னார். தேசிய ஒருமைப்பாட்டிற்கான சர்வமத கூட்டணியின் தலைவர் அஸ்ஸெய்யித் கலாநிதி ஹசன் மௌலானா அல் காதிரி, கொழும்பு பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால் மற்றும் உலமாக்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

தென் மாகாணம்; இறப்பர் செய்கை காணிகளில் உப உணவுப் பயிர்ச்செய்கை

(மாத்தறை தினகரன் நிருபர்)

தென் மாகாணத்தில் இறப்பர் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்ப டும் காணிகளில் உப உணவுப்பயிர்ச் செய்கை மேற்கொள்ள இறப்பர் அபிவிருத்தித் திணைக்கள தென் மாகாண பணிப்பாளர் டீ. எஸ் விதானகே நடவடிக்கை எடுத்துள் ளார்.

காலி, மாத்தறை மற்றும் ஹம் பாந்தோட்டை ஆகிய மாவட்டங் களில் இறப்பர் செய்கைக்காக உப யோகிக்கும் காணிகளில் இந்த உப உணவுப்பயிர்ச் செய்கை மேற்கொள் ளப்படும். இதற்காக 20 ஹெக்ட யார் காணிகளை பயன்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இறப்பர் மரக்கன்றுகள் நடப்பட்டு அந்த இறப்பர் மரம் பெரிதாகி இறப் பர் பால் எடுக்கும் வரையுள்ள காலப் பகுதியில் இந்த உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவிருக்கி றது.

வாழை, அண்ணாசி, மிளகு, மரக் கறிச் செய்கை போன்றவை பயிரி டப்படும். இதற்காக ஒரு ஏக்கருக்கு 4000 ரூபா மானிய உதவி வழங்கப் படும் என்று இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் தென் மாகாணப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

ரூ.04 இலட்சம் பெறுமதியான மோட்டார் சைக்கிள் திருட்டு; இளைஞன் கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் ஜயஸ்ரீபுர பகுதியில் வீடொன்றில் நிறுத்திவைக்கப்பட்டி ருந்த நான்கு இலட்சம் ரூபா பெறும திமிக்க மோட்டார் சைக்கிளை திரு டியதாக கூறப்படும் இளைஞனை மோட்டார் சைக்கிளுடன் விஜேபுர பகுதியில் கைது செய்துள்ளதாக அநு ராதபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

விஜேபுர பகுதியைச் சேர்ந்த 26 வயது இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். ஜயஸ்ரீ புர பகுதியில் சுயதொழில் ஈடுபட்டு வரும் பெண் ஒருவருக்கு சொந்த மான மோட்டார் சைக்கிளை வீட்டின் பின்புறத்தில் திறப்புடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் இரவு நேரத்தில் திருடப்பட்டிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் போதைக்கு முற் றிலும் அடிமையானவர் என்பது டன் திருடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை அடகு வைப்பதற்காக சென்று கொண்டிருந்த வேளை யிலேயே கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்பு டைய 24 வயது மதிக்கத்தக்க மற் றுமொரு இளைஞனையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் சந்தேக நபர்கள் இரு வரும் இணைந்து போதைப்பொ ருட்களை பெற்றுக்கொள்வதற்காக பணம் தேடும் வகையில் திருட்டில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

குடும்ப தகராறு; கத்தியால் குத்தி கணவன் கொலை; மனைவியின் தகப்பன் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

கத்தியால் குத்தி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவமொன்று உட கொரசகல்ல பகுதியில் இடம்பெற் றுள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை (28) இரவு கெக்கிராவ பொலிஸ் பிரி விலுள்ள உட கொரசகல்ல பகுதி வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம் பவத்தில் உட கொரசகல்ல கெக்கிராவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 45 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள் ளார் என்பது தெரியவந்துள்ளது. சம்ப வம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த நபர் தனது மனைவியுடன் அடிக்கடி சண்டையிட்டு துன்புறுத்தி வருவதாகவும் சம்பவதினத்தன்றும் மனைவியை அடித்து துன்புறுத்தியுள் ளார். அச்சந்தர்ப்பத்தில் கொலை செய் யப்பட்டவருடைய மனைவி பக்கத்து வீட்டுக்கு சென்றதன் பின்னர் ஆத்திர முற்ற அப்பெண்ணுடைய தகப்பனார் மருமகனை கத்தியால் குத்தி கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந் துள்ளது. கொலையுடன் தொடர்பு டைய சந்தேக நபர் கொலைக்கு பயன்ப டுத்திய கத்தியுடன் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை இக்ராவில் வித்தியாரம்ப நிகழ்வு

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்தில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை சேர்க்கும் வித்தியா ரம்ப நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம். இஸட். எம். இர்பான் தலை மையில் அண்மையில் நடைபெற் றது.

ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலயத்திற்கு முதல் நாள் வருகை தந்த மாணவர்கள் இரண் டாம் தர மாணவர்களால் சின்னம் மற்றும் மலர்க் கொத்து வழங்கி ஊர்வலமாக அழைத்து வரவேற்கப் பட்டனர். அத்தோடு முதல் நாள் பாடசாலைக்கு சமுகமளித்த சகல மாணவர்களுக்கும் அதிதிகளினால் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட் டன.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக ஹம்பாந்தோட்டை வலயக் கல்விப் பணிப்பாளர் ஒ. பீ. ஜீ. நிலானி, ஹம் பாந்தோட்டை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரார்தனா ஜயசூரிய, பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர் வாகக் கமிட்டி செயலாளர் எம். ஏ. எம். அலாத் பாடசாலையின் பிரதி, அதிபர்கள் மற்றும் பாடசாலை அபி விருத்திச் சங்க உறுப்பினர்களுடன் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்த னர்.

பசியைப் போக்க ஈரப்பலாக்காய் திருடிய பெண்மீது தாக்குதல்

பொலிசில் முறைப்பாடு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை வெலிக்கபொல பிரதேசத்தில் அரிசி வாங்குவதற்காக உறவினர் ஒருவரின் தோட்டத்தில் இருந்த ஈரப்பலாக்காய் மரத்தில் இருந்து காயொன்றைப் பறித்து அதனை விற்று 500 கிராம் அரிசி வாங்கிய பெண்மணி ஒருவர் மீது மரத்தின் உரிமையாளர் தாக்குதல் நடத்தியதாக வெலிகபோல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்ப ட்டுள்ளது.

இம்முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்திய பொலிசார் தாக்கியவர் தாக்கப்பட்டவர் இருவரையும் வரவழைத்து அறிவுரை கூறியதுடன் சமரசம் செய்து அனுப்பியுள்ளனர்.

இந்த அறிவுரைகளை அடுத்து தாக்குதல் நடத்தியவர் மன்னிப்புக் கோரியதுடன் தேவையான அளவு காய்களைப் பறிக்குமாறும் அவர் பாதிக்கப்பட்டவரிடம் வேண்டியதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மாத்தளை மாவட்டத்தில் தேசிய வீட்டு தோட்ட செய்கை

மாத்தளை சுழற்சி நிருபர்

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஹரித தெயக் தேசிய வீட்டு தோட்ட செய்கை வேலைத் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் கமநல சேவை பிரிவுகள் தோறும் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்வேளைத் திட்டத்திற்கமைய கமநல சேவை பிரிவு வீட்டுத் தோட்ட மாதிரிகிராமமாகநிகழ்கொள்ள கிராமம் தெரிவு செய்யப்பட்டு பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. வீட்டுத்தோட்ட பயிற்சி தொடர்பாக இக்கிராமத்தில் விழிப் பூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் நிகழ்கொள்ள ஜூம்மா பள்ளிவாயலில் இடம்பெற்றது இந்நிகழ்வில் யட வத்த கமநல காரியத்தில் விவசாய அதிகாரியும் போதனா ஆசிரியருமான ஆரியவன்ச அபேவர்தன, திட்டமிடல் அதிகாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டு தொடர்ச்சியாக பொது மக்களுக்கு தெளிவுபடுத்தினார். அன்றைய தினம் விவசாயிகளுக்கு திணைக்களத்தினால் வழங்கப்படும் விதை பொதிகளும் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன இதில் இக்கிராமத்தில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்

ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்குட்பட்டவர்களுக்கு எரிவாயுக்கான கூப்பன் விநியோகம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

ஹற்றன், டிக்கோயா நகர சபைக் குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பகுதிகளில் லிட்ரோ மற்றும் லாப் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிப்பதற்காக நுகர்வோரை பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று 30.05.2022 திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அம்பகமுவ பிரதேசசபையின் செயலாளர் ருவனி சிதாரா கமகே தலைமையில் ஹற்றன் டன்பார் மைதானத்தில் கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் ஹற்றன் - டிக்கோயா நகர சபை உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் - டிக்கோயா நகர சபை மற்றும் ஹற்றன் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

தேசிய அடையாள அட்டை மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அல்லது குறித்த வீட்டின் ஏப்ரல் மாத்திற்கான மின் பட்டியல் உள்ளிட்டவைகள் இதன்போது பரிசீலிக்கப்பட்டு எந்த முகவர் நிலையத்தில் எரிவாயு பெற்றுக் கொள்ள வாடிக்கையாளர் உத்தேசித்துள்ளாரோ அந்த முகவர் நிலையம் குறிப்பிடப்பட்டு கூப்பன் ஒன்று விநியோகிக்கப் பட்டது.

இலங்கையில் விவசாய அபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரேரணை

ஹாலி எல விசேட நிருபர்

இலங்கையின் விவசாயத் துறை அண்மைக்காலமாக எதிர்கொண்டுள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு எமது நாட்டின் எதிர்கால விவசாய அபிவிருத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான முன் மொழிவை மூன்று பல்கலைக்கழகங்களின் விவசாயப் பேராசிரியர்கள் குழுவொன்று தயாரித்துள்ளதாக விவசாய, வனவிலங்கு மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகம், ருஹுணு பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 பேர் கொண்ட பேராசிரியர்கள் குழுவினால் இந்த பிரேரணை விவசாய, வனவிலங்கு மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் அண்மையில் விவசாய அமைச்சில் கையளிக்கப்பட்டது.

பேராசிரியர் புத்தி மரம்பே, பேராசிரியர் ஜனேந்திர டி கொஸ்டா, பேராசிரியர் தேவிகா டி கொஸ்டா, பேராசிரியர் அருண குமார, பேராசிரியர் சீவானந்த வேல், சமன் தர்மகீர்த்தி, பேராசிரியர் மெத்திகா விதானகே, பேராசிரியர் நலிகா ரணதுங்க, பேராசிரியர் வர்ஷி தண்டெனிய மற்றும் பேராசிரியர் நிலந்த லியனகே நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால என மூன்று பிரிவுகளின் கீழ் விவசாய நடவடிக்கைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துதல் குறித்த இந்த முன் மொழிவைஅவர்கள்வகுத்துள்ளனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர்கள், எதிர்காலத்தில் இலங்கை சந்திக்கும் உணவு நெருக்கடியை சமாளிக்க வேண்டுமாயின் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

பேராசிரியர்கள் முன் வைத்த யோசனை தொடர்பில் கருத்து தெரிவித்த விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, பிரேரணையில் உள்ள அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். இலங்கையின் உணவுப் பாதுகாப்புத் திட்டமானது கடந்த மகா பருவத்திலும், நடப்பு யாலப் பருவத்திலும் ஆபத்தான நிலையில் இருந்ததாகவும் அவர் கூறினார்.

எரிவாயு சிலிண்டர்கள் காணாமல் போயுள்ளன; அதிர்ச்சியில் மக்கள்

ஹற்றன் சுழற்சி நிருபர்

அட்டனில் உள்ள சமையல் எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையத்திற்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்கள் காணாமல் போயுள்ளன.

சமையல் எரிவாயு சிலிண்டரை பெற்றுக் கொள்ளும் வகையில் இரவு பகலாக எரிவாயு சிலிண்டர் விற்பனை நிலையத்திற்கு முன்னால் எரிவாயு சிலிண்டர்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்களே காணாமல் போயுள்ளன.

இரவு பகலாக பல நாட்கள் வைக்கப்பட்டிருந்த சிலிண்டர்களை இரவு வேளைகளில் பாதுகாப்பதற்கு சிலர் முன்வந்துள்ளனர்.

சிலிண்டர் ஒன்றை பாதுகாப்பதற்கு ஒருவரிடம் இருந்து தலா 50 ரூபாவை குறித்த நபர்கள் அறவிட்டு வந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இவ் வாறான சூழ்நிலையிலேயே எரிவாயு சிலிண்டர்கள் காணாமல் போயுள்ளன.

இதற்கு பொறுப்பு கூறுவதற்கும் யாரும் இல்லாத நிலைமை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் தமது எரிவாயு சிலிண்டர்கள் காணாமல் போனமை தொடர்பில் அட்டன் நகர சபை மீது மக்கள் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக தெரிவித்து வரிசையாக வைக்கப் பட்டிருந்த சிலிண்டர்களை அகற்று மாறு நேற்று முன்தினம் அட்டன் நகர சபை அறிவுறுத்தல் வழங்கியிருந்தது.

இதனையடுத்தே எரிவாயு சிலிண்டர்களை வீட்டிற்கு எடுத்துச் செல்லும் நோக்குடன் உரிமையாளர்கள் வருகைதந்த போது, குறித்த சிலிண்டர்கள் காணாமல் போயுள்ளன.

மக்கள் செல்வங்களை எனக்கு தந்துவிட்டே, எனது தந்தை விடைபெற்றுள்ளார்; தொண்டமானின் ஜனன தினத்தில் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்

என் உயிரிலும் மேலான மக்கள் செல்வங்களை எனக்கு தந்து விட்டே, எனது தந்தை விடை பெற்றுள்ளார். அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும், எதிரணியில் இருந்தாலும் மக்களுக்கான எனது சேவைகள் தொடரும். என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மலையகத் தமிழர்களின் அரசியல் காவலனாக கருதப்படும், அமரர் ஆறுமுகன் தொண்டமானின், 58 ஆவது ஜனன தினம் இன்றாகும்.

இதனை முன்னிட்டு கொட்டகலை சி.எல்.எவ் வளாகத்தில் மல ரஞ்சலி, புகழஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் மருத பாண்டி ராமேஷ்வரன், உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலகளுக்கு மடிக்கணினிகளும், 'போட்டோ கொப்பி மெசின்'களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜீவன் தொண்டமான்,

